# அறிவுக் களஞ்சியம்

36



மனிதருள்

ஒரு

மாணிக்கம்

3 ஆம் பக்கம் பார்க்க

வரதர் வெளியீடு ரூபா 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் குரல்

* அறியாமை என்னும் இருளை நீக்கி அறிவு என்னும் ஒளியைப் பாய்ச்சுவது தான் கல்வி ...... அறிவுக் களஞ்சியம்-35 பொது அறிவு என்னும் பொக்கிசம் அறிவுப் பசிக்கு நல்ல தீனி. தொடரட்டும் பணி. வளரட்டும் அறிவுக் களஞ்சியம்!

நல்லூர் — நாகமணி மகேந்திர லிங்கம்.

* அறிவுக் களஞ்சியமே,
  உண்மையா- நீ
  வந்தது உண்மையா?
  திகைப்பு எனக்கு
  மகிழ்ச்சியான திகைப்பு
  வளர்க நீ — ...

சுன்னாகம். செல்வி வி. மாணிக்கவாசகம்

* கடந்த மூன்று ஆண்டு கால இடை வெளிக்குப் பின்னர் அறிவுக் களஞ்சியம் வெளி வருவதில் பெரு மகிழ்ச்சி யடைகிறேன். அறிவுத் தேவைக்கான சிறந்த நூலாக அ. க. விளங்குகிறது. பண்டிதமணி பற்றிய தகவல்கள், மற்றும் விஷயங்களும் நன்றாக இருக்கின்றன.

தொல்புரம் — கே. இராசகோபால்

* அறிவுக் களஞ்சியம் 35 ல் பண்டிதமணி அவர்களைப் பற்றிய கட்டுரை மிகச் சிறப்பாக அமைந் திருந்தது. அது அவருடைய வாழ்க்கை வரலாறாக அமையாத போதும், அவரைப் பற்றிய ஒரு நல்ல அறிமுகமாக அமைந் திருந்தது பாராட்டுக்கள். இவ் விதமே நமது நாட்டுத் தமிழ்ப் பெரியார்களைப் பற்றி ஒவ்வொரு இதழிலும் கட்டுரைகள் வெளியிடுங்கள். வளர்ந்து வரும் இளம் சமுதாயத்துக்கு மிக உபகாரமாக இருக்கும்.

சாவகச்சேரி. —க. செல்லையா

* நீண்ட இடை வெளிக்குப் பிறகு அறிவுக் களஞ்சியத்தைக் கண்டு அக மகிழ்ந்தேன். சிறு சிறு கட்டுரைகளாக நிறைய விடயங்களை அறியக் கூடியதாக இருந்தது. வளர்க நும் பணி!

மானிப்பாய் — வை. சேனாதிராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S.T.3

# நம்பிக்கை

மகள் கேட்கிறாள் :

'எத்தினை நாளைக்கு இப்பிடி இருக்கப் போகுது? சனங்கள் களைச்சுப் போக மாட்டாங்களா?'

தந்தை சொல்கிறார் :

'அடக்கு முறைக்கு அஞ்சி நடுங்கி ஒரு தேசிய இனம் நசிஞ்சு போனதா வரலாறு இல்லை. மக்கள் என்றைக்கும் தோற்றுப் போனது இல்லை. நியாயமான போராட்டங்கள் ஒரு நாளும் நின்று போனதில்லை. ...

'எவ்வளவு இழப்பு — ... இந்த இழப்பெல்லாத்தையும் ஈடு செய்து நாங்கள் தலை நிமிர முடியுமா அப்பா? —...'

'நிச்சயமாக முடியும். யுத்தத்தில் எரிஞ்சுபோன ஜப்பான் ஏகாதிபத்திய வெறியில் கருகிப்போன வியத்நாம் போன்ற நமது அயல் நாடுகள் சாம்பலிலிருந்து உயிர்த்தெழ வில்லையா? குண்டுகளாலும், கந்தகத் தூளாலும், கிருமிக் குண்டுகளாலும் நாசமாக்கப்பட்ட நமது மண், மீண்டும் வெங்காயமும், புகையிலையும் மிளகாயும், பழவகையும் பயிராகிற பசுமையான பூமியாக மாறும். ஒரு லட்சம் புத்தகங்களோட எரிஞ்சுபோன நூல் நிலையம் போல நாங்கள் இன்னும் பல நூலகங்களை உண்டாக்குவோம். சுவடே இல்லாமல் குண்டு வீச்சினால் அழிந்து போன கட்டிடங்கள் இருந்த இடத்தில் நவீன கட்டிடங்களை நாங்கள் கட்டுவோம்... எல்லாத்தையும் விட, உன்னதமான ஒரு புதுத் தலை முறையை நமது பூமி காணப் போகுது!

'சின்னஞ் சிறு மலர் மழையில் நனைகிறது'
என்ற குறுநாவலில்
செ. யோகநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுக் களஞ்சியம் 36

அறிவியல் தொடர் வெளியீடு

மேலாளர் :- வரதர்

இணை ஆசிரியர்கள் :- ச. பாலசுந்தரம், பீ. ஏ. (சிறப்பு)
ந சிவபாதம் ஜே. பி. (புத்தொளி)

உதவி ஆசிரியர் :- செல்வி. வை. சுகன்யா

முகாமையாளர் :- அ. க. சண்முகதாசன்

முகவரி:- 226, காங்கேசன் துறைச் சாலை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 2820

அரண் செய்வோர்;

- ❋ வித்துவான், க. சொக்கலிங்கம், எம். ஏ. (சொக்கன்)
- ❋ சி. சிவசரவணபவன், எம். ஏ. (சிற்பி).
- ❋ சு. குமாரசாமி, பி எஸ்ஸி, (சாமிஜி).
- ❋ கலாநிதி க. குணராசா, (செங்கை ஆழியான்).


## நீங்களும் எழுதலாம்!

அறிவுக் களஞ்சியத்துக்கு நீங்களும் எழுதலாம். அறிவியல் தொடர்பான சுவையான விடயங்களைச் சுருக்கமாக — ஒரு பக்கத்துள் வரக் கூடியதாக எழுதுங்கள். (ஒரு எச்சரிக்கை) வேறு பத்திரிகைகளிலோ புத்தகங்களிலோ வந்த விடயங்களை அப்படியே 'கொப்பியடித்து' எழுதக் கூடாது)

உங்கள் கட்டுரை ஏற்றுப் பிரசுரிக்கப் பட்டால் அதற்குச் சன்மானமும் கிடைக்கும்.

## வினாவும் விடையும்

வரவிருக்கும் வினாவிடைப் பகுதிக்கு நல்ல வினாக்களை நீங்கள் எழுதி அனுப்பலாம். நான்கு வினாக்கள் மட்டும் தெரிவு செய்யப் பட்டு அவற்றுக்கு விளக்கமான பதில்கள் தரப்படும்.
அந்த வினாக்களைக் கேட்ட நால்வருக்கும் ரூபா 20/- வீதம் பரிசு கிடைக்கும்.

## வாசகர் குரல்

அடுத்த இதழிலிருந்து 'வாசகர்' குரல் பகுதி வெளிவரும். அறிவுக் களஞ்சியம் பற்றிய உங்கள் கருத்துக்களை மிகச் சுருக்கமாக எழுதி அனுப்பினால் அவை உங்கள் பெயருடன் பிரசுரமாகும்.

—ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர் திரு. மில்க்வைற் கனகராசா அவர்கள் கடந்த 23 - 7 - 98ல் நம்மை விட்டுப் பிரிந்து விட்டார். அவரைப் பற்றி

# மனிதருள் ஒரு மாணிக்கம்

கடந்த ஒரு ஐம்பது ஆண்டு காலத்தில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த பெரியார்களைப் பற்றிக் குறிப்பிடுவதென்றால், அவர்களில் 'மில்க் வைற்' கனகராசா அவர்கள் நிச்சயமாக இடம் பெறுவார்.

திரு கனகராசா அவர்களுக்கு அரசாங்கத்தினால், சமாதான நீதவான் பட்டமும், மேலை நாட்டுப் பல்கலைக் கழகம் ஒன்றினால் கலாநிதிப் பட்டமும் கிடைத்ததற்கு மேலாக, மக்கள் நிறுவனங்களால் சிவதர்மவள்ளல், தேசபந்து முதலான அநேக பட்டங்கள் கிடைத்தன.

ஆனால்,

தமது தகப்பனார் சிறிய அளவில் தொடங்கிய மில்க் வைற் சவர்க்காரத் தொழிலகத்தை திறம்பட வளர்த்து தமது செயல் திறனைக் காட்டியதன் மூலம் 'மில்க் வைற்' என்ற பட்டமே அவரே டு இயல்பாக ஒட்டிக் கொண்டது.

கனகராசா சிறந்த ஒரு தொழிலதிபராக மட்டுமே வாழ்ந்திருந்தால், மக்கள் இவ்வளவு தூரம் அவருக்கு மதிப்பளித்திருக்க மாட்டார்கள் - நானும் இப்போது இந்தக் கட்டுரையை எழுத வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது.

அவர் ஒரு சிறந்த மனிதனாக வாழ்ந்தவர். - மக்களுக்காக வாழ்ந்தவர்.

அவருடைய மூச்சுப்படாத யாழ்ப்பாணத்துக் கிராமங்களே எதுவுமில்லை என்று சொல்லலாம். எங்கே ஒரு பொது நலத் தொண்டு நடந்தாலும் கனகராசாவும் அங்கே இருப்பார். அவர் இல்லாவிட்டால் அவருடைய பெயராவது அங்கே இருக்கும்.

யாழ்ப்பாணத்தின் கற்பக தருவான பனை வளர்ச்சியில் அவர் காட்டிய ஆர்வம் - அது மட்டுமல்ல, எல்லாவிதமான மரம் செடி கொடிகளின் வளர்ச்சியிலும் அவர் காட்டிய ஊக்கம் - விவசாய வளர்ச்சியில் அவர் காட்டிய விருப்பம் - இவை எல்லாவற்றிலுமே அவரது நாட்டுப்பற்றும் மனித நேயமும் தெளிவாக முத்திரை பதித்திருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர்களின் கல்வி வளர்ச்சியில் மிகுந்த அக்கறை காட்டினார் அவர். கல்வித் தொடக்கம் செய்யும் குழந்தைகளுக்காக தமிழ் உயிர் எழுத்துக்கள் அச்சிட்ட ஓலைச் சுவடிகளை ஆண்டு தோறும் ஆயிரக் கணக்கில் இலவசமாகவே அளித்து வந்த பெருந்தகை அவர்.

அறிவு வளர்ச்சிக்கான சஞ்சிகைகளையும், நூல்களையும் வாசக சாலைகளுக்கும் ஆர்வலருக்கும் அள்ளி அள்ளி வழங்கிய வள்ளல் அவர்

அறிவுக் களஞ்சியமான 'மில்க் வைற்' சஞ்சிகையை - மறைந்த பேரறிஞர் க. சி. குலரத்தினம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு -நடத்தி இலவசமாகவே மக்களுக்கு வழங்கிய அவருடைய அருஞ்செயல் தமிழ் உள்ளளவும் அவர் பெயரை நிலை நிறுத்தும்.

அறிஞர்களையும், ஆன்மீகப் பெரியார்களையும் போற்றிப் பெருமை செய்து மனம் நிறைவு கண்டவர் மில்க் வைற் கனகராசா அவர்கள்.

பெரியார்களின் பொன் மொழிகளை அழகாக அச்சிட்டு மக்களிடையே பரப்பினார் அவர்.

வள்ளுவர் பெருமானின் திருக்குறள் மொழிகளை அச்சிட்டு மக்களிடையே பரப்பினார் பஸ் வண்டிகளில் திருக்குறள் பாக்களைப் பதித்துப் புதுமையான முறையில் மக்களிடையே நல்லறிவை வளர்த்தார்.

யோகாசனத்தையும், இயற்கை வைத்தியத்தையும் தாம் கைக்கொண்டு பயன் பெற்றதோடு, அவைகளை மக்களிடையே பரப்பவும் பெரிய பிரசாரம் செய்தார்.

மில்க் வைற் கனகராசா அவர்களின் வாழ்க்கையை நோக்கினால், அது ஒரு தனி மனித வாழ்க்கை அல்ல.

அது ஒரு பெரிய தாபனம்! ஆற்றலுள்ளார் பலர் கூடிய ஒரு பெரிய தாபனம் செய்யக் கூடிய செயல்களை அவர் செய்திருப்பது மதிப்புக்குரியதாக மட்டுமல்ல, பெருவியப்புக்குரியதாகவும் இருக்கிறது'

அவர் மனிதருக்குள் ஒரு மாணிக்கம்!

—வரதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்துக்

# கல்விப் புலமைக்குச் சான்று

— சாமிஜி

ஐம்பதுகளின் முற்பகுதியில் யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு புத்தகம் வெளியாயிற்று.

யாழ்ப்பாணத்தின் கல்விப் புலமைக்குச் சான்றாக அமைந்தது இந்தப் புத்தகம்.

சுமார் அறுபது பக்கங்களே கொண்ட இந்தப் புத்தகம் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது.

புத்தகத்தை எழுதியவர் 'சைவப் பெரியார்'! 'நாவலர்' என்றால் அது எப்படி நல்லூர் ஆறுமுக நாவலரைக் குறிக்குமோ அப்படியே 'சைவப்பெரியார்' என்று சொன்னால் அது புலோலியூர் சு. சிவபாதசுந்தரனார் அவர்களையே குறிக்கும்.

பட்டப் படிப்புக்கு கணிதம், தருக்கம் ஆகிய பாடங்களை ஆங்கிலத்தில் படித்துப் பட்டம் பெற்றவராயினும் 'சைவப்பெரியார்' நல்ல தமிழில் எளிமையான நடையில் மிகவும் தெளிவான முறையில் சிறந்த சைவ நூல்களை எழுதியுள்ளார்.

'சைவபோதம்' நூல்களும், 'திருவருட் பயன்' உரையும் சைவப் பெரியார் எழுதிய நூல்களுள் விசேடமாகக் குறிப்பிடத் தக்கவை.

இவர் எழுதிய 'Saiva School Hinduism' என்ற ஆங்கில நூல் இங்கிலாந்தில் உள்ள 'அலன் அன் அன்வின் கம்பனி' யாரால் வெளியிடப்பட்டது.

பெர்னார்ட் ஷா, பேட்ரான்ட ரஸ்ஸல், டாக்டர் ராதாகிருஷ்ணன் போன்ற உலகப் புகழ் பெற்ற மேதைகளின் நூல்களை வெளியிடும் கம்பனி இது என்பது குறிப்பிடத்தக்கது.

அது நிற்க —

'சைவ சித்தாந்தம்' பற்றிய ஒரு புத்தகம் மிஸ் வயலட் பரஞ்சோதி என்ற ஒரு கிறித்தவ அம்மையாரால் எழுதப்பட்டது. இந்த அம்மையார் 'பி .எச்டி' பட்டம் பெற்றவர்.

இந்தப் புத்தகத்தை சென்னைப் டல்கலைக் கழகத்தினர் தத்துவ ஞானம் பயிலும் மாணவர்களுக்கான ஒரு உசாத்துணை நூலாக அங்கீகரித்திருந்தனர்.

இந்தப் புத்தகத்தில் தப்பும் தவறுமான பல விஷயங்கள் பிரசுரமாகி இருந்தன. சைவசித்தாந்தத்தின் அடிப்படையே புரிந்து கொள்ளப்படாமல் எழுதப்பட்டிருந்தது.

மெய்கண்டார் எழுதிய 'சிவ தான போதம்' என்ற நூல் மிகவும் நுட்பான முறையில் விளக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளப்பட்டு அம்மையாரால் விமரிசனம் செய்யப்பட்டிருந்தது.

ஞான சமுத்திரமான சிவ ஞான போதம் எங்கே, வயலட் பரஞ்சோதி அம்மையார் எங்கே!

அம்மையார் எழுதிய புத்தகம் ஆங்கில மொழியில் இருந்தது.

இந்தப் புத்தகத்துக்கு தர்க்க ரீதியான சரியான ஒரு மறுப்பு வெளியிட வேண்டும் என்ற கொதிப்பு தமிழ் நாட்டிலுள்ள சைவ அபிமானிகளுக்கும் தமிழ் அன்பர்களுக்கும் எழுந்தது.

தருமபுரி ஆதீனத்தின் தலைவரான சோமசுந்தரத் தம்பிரான் பொருத்தமான ஆள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சைவப்பெரியார் சிவபாதசுந்தரனாரே என்பதை உணர்ந்தார்!

சோமசுந்தரத் தம்பிரானின் வேண்டுகோளை ஏற்று சைவப் பெரியார் ஒரு தெளிவான தர்க்க வாத அடிப்படையில் அமைந்த ஒரு மறுப்பு நூலை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டார்!

அந்தப் புத்தகத்தின் பெயர் –

'An Cu lime of Shivag a a do ham With a Rejosinder To a Christian Cjithe'

---

## சொற் சாதுரியம்

இந்தியாவிலிருந்து இஸ்லாமியர் பெருமளவு வாழும் பிரதேசங்களைப் பிரித்துப் 'பாகிஸ்தான்' உருவாக்கப்பட வேண்டும் என்று முஸ்லிம் லீக் தலைவர் ஜனாப் ஜின்னா மிகவும் போராடிக் கொண்டிருந்த வேளை. சுதந்திரம் கைக்கெட்டவில்லை. இருந்தும் மகாத்மாகாந்தி முதலிய தலைவர்கள் இந்தியப்பிரிவினையைக் கடுமையாக எதிர்த்த நாள்கள். அக்காலத்தில் அரசியற் சாணக்கியரான 'ராஜாஜி' பிரிவினை ஒன்றே சுதந்திரம் பெற வழி என்று கூறியதோடு தமது முடிவிற்கு வலுவேற்ற மேடைகளில் பிரசாரம் செய்தும் வந்தார். முஸ்லிம்களில் ஒரு சாராரும் இந்துக்களிற் பெரும் எண்ணிக்கையினரும் பிரிவினையை எதிர்த்த ஒரு சந்தர்ப்பத்தில் ராஜாஜியின் பேச்சுக்களுக்குச் செவி சாய்க்க எவரும் தயாராயில்லை. அவர் பேசும் இடங்களில் கல்லெறிகள், அடிபிடிகள் அடிக்கடி குழப்பங்கள், இடம் பெற்றன. அவர் பேசிய கூட்டம் ஒன்றில் அவரை நோக்கிக் கல் வீசப்பட்டது. அந்தக் கல் குறிதவறி அவரின் பக்கத்தில் வீழ்ந்தது. ராஜாஜி சிரித்துக் கொண்டே 'சொன்னார் ' இந்தியர் குறி தவறாது கல்வீசத் தெரிந்திருந்தால் அவர்களுக்கு எப்பொழுதோ சுதந்திரம் கிடைத்திருக்கும்'

சோனா

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின்

# 'ஜெற்' வேக வீராங்கனை!

யாழ்ப்பாணம், யாழ்ப்பாண மாயிருந்த போது கல்வித்துறையில் மட்டுமல்லாது விளையாட்டுத் துறையிலும் எம்மவர் பல சாதனை களைப் படைத்தனர். இவர்களின் வரிசையிலே உலகளாவிய புகழுக் குரியவராய் ஒரு தமிழ் வீராங்கனை விளங்கினார் என்பது எமக்கெல் லாம் பெருமை சேர்ப்பதாகும். (அந்நாட்களில் இவர் தமது அதி வேக ஓட்டத்தினால் 'ஜெற்' எனப்பாராட்டப்பட்டமை குறிப் பிடத்தக்கது)

அண்மையில் சுண்டிக்குளி மக ளிர் கல்லூரி தனது நூற்றாண்டு விழாவையொட்டிச் 'சிறப்புமலர்' ஒன்றினை வெளியிட்டுள்ளது. தனது புதல்வி ஒருத்தி, மெய்வல் மைப் போட்டியில் உலகசாதனை படைத்த வரலாற்றினை, ஒரு தாய்க்கே உரிய பெருமிதத்தோடு அக்கல்லூரியின் மலர், தந்துள்ள கட்டுரையின் சாரத்தை இங்குத் தருகின்றோம்.

இந்த நூற்றாண்டின் தலை சிறந்த மெய்வல்லுனர் செல்வ கௌரி அநாதரட்சகன் என்பதற்கு ஐயம் இல்லை. அவர் இலங்கையில் மட்டுமன்றி வெளிநாட்டிலும் பாராட்டுக்கள் பெற்றவர். உல கெங்கணுமுள்ள நாளிதழ்கள் விளையாட்டு, மெய்வன்மை தொடர்பான சஞ்சிகைகள் யாவும் அவர் புகழ் பாடின

சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் தமது மெய்வன்மைத் துறையைத் தொடங்கிய செல்வ கௌரி கல்லூ ரிப் போட்டிகளில் தமது திறமை களை முதலில் வெளிப்படுத்தினார். அடுத்து யாழ்ப்பாணத்து A. A A, போட்டிகளிலும் தொடர்ந்து தேசிய அளவிலும் தமது சாதனை களை நிலைநாட்டினார். கனிஷ்ட பிரிவில் இரண்டு சாதனைகளும் சிரேஷ்ட பிரிவில் நான்கு சாதனை களும் நிகழ்த்தி 100 மீற்றர் தடை தாண்டற் போட்டியில் 'வீராங்க னை விருது' பெற்ற பெருமை அவருக்கு உரியது. இவற்றோடு நின்றுவிடாது மேலும் 100 மீற்றர் தடை தாண்டல் போட்டிகள் பல வற்றில் அரிய சாதனைகள் படைத் தவர் அவர்.

1979 இல் பிரித்தானியாவுக் குக் குடிபெயர்ந்த (அவர் பிறப் பால் பிரித்தானிய பிரஜை) செல்வ கௌரி, சர்வதேச மெய் வன்மைப் போட்டிகளில் இங்கிலாந் தின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார். 1938 இல் சக்கராதி பத்திய நாடுகளிடையேநடைபெற்ற மெய்வன்மைப் போட்டிகளில் ஒரு மைல் ஓட்டத்தில் விருதுபெற்ற ஜிம் அல்பிரெட்டும், காற்பந்து வீரரான இவரின் தந்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளித்த பயிற்சிகளும் தூண்டுதலும் 400 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் முழுமையாக அவரை ஈடுபட வைத்தன. பிரித்தானிய மெய்வன்மைப் போட்டிகளில் 400 மீற்றர் தடைதாண்டலில் அவர் இரண்டாவதிடத்தைப் பெற்றதால் பிரித்தானியாவில் முன் எக்காலத்தும் இல்லாத மிக விரைவோட்ட வீராங்கனை யெனக் கணிக்கப்பட்டார். 1993இல் 'மற்ற எவரிலும் (பெருமளவு) மிகுந்த விரைவோட்ட வீராங்கனை' என்று அவரைப் பாராட்டினார் றிச்சட் லிஸ்ரென். 'சிறு பெண் என்ற வகையில் நீ உண்மையில் சிறப்பாக ஓடினாய்' என்று பாராட்டினார் லின்போட் கிறிஸ்றி.

ஆசிய மெய்வன்மைப் போட்டியில் கலந்து தமது திறமையை வெளிப்படுத்திய செல்வகௌரிக்குத் திறமை அடிப்படையில் ஆறாவது இடம் கிடைத்தது. 1992 இல் நிகழ்ந்த ஒலிம்பிக் போட்டியின் இறுதித் தெரிவில் ஓர் இடத்தால் தெரிவு பெறாது தவறிப்போனது இவருக்குப் பெரும் கவலையை அளித்தது. 'என்னால் இயன்ற அளவு சிறப்பாகப் போட்டியிட்டும் அன்றைய போட்டியின் தரத்தின் அளவை என்னால் அடையக் கூடவில்லை' என்று ஏமாற்றத்துடன் குறிப்பிட்டார்.

எவ்வளவோ சிறப்பாகப் போட்டிகளிலே கலந்து கொண்டு தம் திறமையைப் புலப்படுத்திய போதிலும் பிரித்தானியா செல்வகௌரிக்கு வழங்க வேண்டிய கௌரவத்தினை வழங்காமை கவலை தருவதாகும். 'உலக தரத்தினர் ஆனால் பெரும் திறமையாளர் அல்லர்' என்று அத்லெற்றிக் வீக்லி (Athl tic Weekly) இவரைக் குறைத்தே மதிப்பிட்டது. இவரிலும் தரம் குறைந்த ஆண், பெண் மெய்வல்லுனரின் நிலையிற் கூட இவரை வைக்காது. இவரின் வரலாறு இருட்டடிப்புச் செய்யப்பட்டது. (பீற்றர் மத்யூஸ் மெய்வன்மைப் போட்டி — 1992)

தடை தாண்டல் ஓட்டத்தில் மட்டுமன்றி 2000 மீற்றர் நீண்ட தூர ஓட்டத்தினை 7·410 செக்கனிலும், 10 கி. மீற்றர் ஓட்டத்தினை 39 நிமிடங்களிலும் பூர்த்தி செய்து, ஐக்கிய இராச்சியத்தின் தலை சிறந்த வீராங்கனையானார் செல்வி கௌரி அநாதரட்சகன்.

நன்றி சுண்டிக்குழி மகளிர் கல்லூரி நூற்றாண்டு மலர்

---

வங்கியிலும் பெரிய நிதிநிறுவனங்களிலும் வாடிக்கையாளருக்கு பணம் வழங்குபவரை CASHI R என்கின்றோம். ஏன் அவரை காசு ஈயர் என்று சொல்லக்கூடாது?

— வாயிலார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தாளர் ✯

# எனிட் பிளைற்றன்

யாழ்ப்பாணப் பொது சன நூல கங்கட்குச் செல்வோர் சிறுவர் பகுதியில் பெருமளவு எனிட் பிளைற்றன் (Enid Blyton) எழுதிய நூல்களைக் காணலாம். உலகப் புகழ் மிக்க Famous Five (21 நூல்கள்) Secret Seven (15 நூல்கள்) போன்றவற்றைப் படைத்த இங்கிலாந்து தேசப் பெண்மணியான எனிட் பிளைற்றன் 1897 இல் பிறந்தார்

இவர் தன் வாழ்நாளின் இறுதிக்காலம் வரை சிறுவர் இலக்கியங்களைப் படைப்பதில் ஈடுபட்டார். இவர் சிறுவர்களுக்காகப் பெருமளவு நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள், நாடகங்கள், என்பவற்றை எழுதினார். இவர் சிறுவர்கட்காக எழுதிய நாவல்கள் பெரியவர்களாலும் விரும்பி வாசிக்கப்படுகின்றன.

இப்பொழுதும் இவரது நூல்களின் பல்லாயிரம் பிரதிகள் ஆண்டு தோறும் அச்சிடப் படுகின்றன. பிளைற்றனின் பல சிறுவர் நாவல்கள் திரைப்படமாக்கப்பட்டுள்ளன. இவர் எழுதிய நூல்கள் 650க்கும் அதிகம் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

உலகில் அதிக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட நூல்களை எழுதிய பெண் எழுத்தாளர்களுள் பிளைற்றனும் ஒருவர். அவரது நூல்கள் ஏறத்தாள 125 மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன.

சில வருடங்களின் முன் 'சொக்கன்' ஐயா அவர்கள் (வித்துவான் க சொக்கலிங்கம்) எனிட் பிளைற்றனின் Brer Rabbit கதைகள் (சிறுகதைகள்) பலவற்றைத் தமிழிற்கு மொழி பெயர்ப்புச் செய்தார்.

அவற்றுள் ஒரு தொகுதி 'போக்கிரி முயலாரின் சாகசங்கள்' எனும் பெயருடன் 'வரதர்' வெளியீடாக வெளிவந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

சிறுவர் இலக்கியங்களுக்குத் தன் வாழ்நாட்களை அர்ப்பணித்த எனிட் பிளைற்றன் தன் 71 ஆவது வயதில் 1968 ஆம் ஆண்டு காலமானார். அவரது பூதவுடல் மறைந்தாலும் புகழுடல் மறையவில்லை. அவரது நூல்கள் இன்னும் பல காலம் புகழுடன் நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை. ○

தில்லைநாதன் கோபிநாத் (யாழ் இந்துக் கல்லூரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அல்பிரட் நோபல்

'நோபெல்' பரிசு பற்றி அனைவரும் கேள்விப்பட்டிருப்பார்களே! ஒவ்வொரு வருடமும் பல துறைகளிலும் அறிஞர்களைத் தெரிவு செய்து இப்பரிசை வழங்குவர். இப்பரிசுக்கு இந்தப் பெயர் எப்படி வந்தது என்பது பலர் அறியாத விடயம்.

அல்பிரட் நோபெல் என்பவர் சுவீடன் நாட்டு இரசாயன அறிஞர். ஸ்ட்டாக் ஹோம் நகரில் பிறந்த இவர் ரஷ்யாவில் கல்வி கற்று அமெரிக்காவில் எந்திரவியல் பயிற்சி பெற்றவர். தன் திறமையால் பல வகை வெடி மருந்துகளையும் இவர் கண்டு பிடித்தார். டைனமைட் இவராலேயே கண்டுபிடிக்கப்பட்டது.

அல்பிரட் நோபெல் தான் கண்டு பிடித்த வெடிமருந்துகளை விற்று ஏராளமான பொருள் சேர்த்தார். இதைவிட இவர் சிறந்த ஓர் இலக்கிய சர்வலர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

காலப் போக்கில் நோபெலை இயலாமை பற்றிக் கொண்டது உடல் நலம் கெட்டது. அப்போது தாம் கண்டு பிடித்த வெடிமருந்துகள் அனைத்தும் அழிவுக்குப் பயன்படலாம் என்ற எண்ணம் இவரை வாட்டியது. இக் குற்ற உணர்வைப் போக்க தாம் தேடிய செல்வத்தின் பெரும் பகுதியைப் பரிசுகளுக்காக எழுதி வைத்தார். அந்த மாமனிதரின் நினைவாக இன்று வரை நோபெல் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

நோபெல்பரிசைப் பெறும் ஒருவர் இன்று உலகம் முழுவதும் பெரும் புகழ் பெறுகின்றார்.

## நைட்டிங்கேல்

மனிதர்களைப் போலவே பல்வேறு இராகங்களில் பாடும் பறவை பற்றி கேள்விப்பட்டீர்களா? அது தான் நைட்டிங் கேல். கடுகு சிறிது காரம் பெரிது என்பதற் கேற்ப இவை உருவத்தில் சிறிதாக இருந்தாலும் மேனாட்டு இலக்கியங்களில் தவறாமல் இடம் பெற்று வருகின்றன.

இவை பாடும் பாடல்களை சொற்களால் வர்ணிக்க முடியாது என்பதும் இப் பறவையின் பல்வேறு சுரங்களை எழுத்தில் அமைக்க பலகாலமாக முயற்சி நடை பெறுகின்றதென்பதும்குறிப்பிடத்தக்கது. இவற்றின் ஆண் குருவி மட்டுமே இவ்வாறு பாடும்.

இத்தனைக்கும் இச் சிறுபறவை அழகானதல்ல. சாதாரண ஒரு சிறு குருவி போன்றே இது இருக்கும். இதைப் பற்றிப் பல புராணக் கதைகள் உண்டு. தேவர்களின் சாபத்தாலே இது பறவையானதாக அந்தப் புராணக் கதைகள் கூறும்.

இவை மரங்கள் அடர்ந்து செறிந்துள்ள தோப்பினுள்ளே அழகான கூடுகளைக் கட்டும். அதிலே முட்டை இடும். முட்டைபொரித்ததும் ஆரம்பத்தில் குஞ்சு வேறு நிறத்திலேயே இருக்கும். பின்வளர வளர பெற்றோரைப் போலாகும்.

நைட்டிங் கேல் இரவு, பகல் என எல்லா வேளைகளிலும் இசை, மழையைப் பொழிந்த வாறே இருக்மாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லைகளுக்கு அப்பால்

# சாதாரண விதிகள் செல்லுபடியாகாது

கீழே இரண்டு தொடர்கள் உள்ளன. அவற்றை அவதானித்து பாருங்கள். இரண்டு தொடர்களுமே முடிவிலி வரைக்கும் செல்லுகின்றன.

1, 2, 3, 4, 5, ...............
2, 4, 6, 8' 10, ...............

முதலாவது தொடரில் ஒன்று தொடங்கி எல்லா எண்களும் உள்ளன.

இரண்டாவது தொடரில் இரண்டு தொடக்கம் எல்லா இரட்டை எண்களும் உள்ளன.

முதலாவது தொடரில் உள்ள ஒவ்வொரு இலக்கத்திற்கு எதிராகவும் இரண்டாவது தொடரில் ஒரு இலக்கம் உள்ளது.

உதாரணமாக : 1 — 2
2 — 4
3 — 6
4 - 8
........

முதலாவது தொடரில் உள்ள ஒவ்வொரு இலக்கத்தின் இரண்டு மடங்காக இரண்டாவது தொடரில் உள்ள இலக்கங்கள் இருக்கின்றன.

இப்போது ஒரு கேள்வி —

முதலாவது தொடரில் உள்ள அத்தனை இலக்கங்களையும் கூட்டினால் வரும் கூட்டுத்தொகை பெரியதா அல்லது இரண்டாவது தொடரில் உள்ள அத்தனை இலக்கங்களையும் கூட்டினால் வரும் கூட்டுத்தொகை பெரியதா என்பதுதான் கேள்வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு வகையாக, நமது சிந்தனை செல்லலாம்.

முதலாவது தொடரில் எல்லா இரட்டை எண்களும் இருப்பதோடு, எல்லா ஒற்றை எண்களும் இருக்கின்றன, எனவே முதலாவது தொடரின் கூட்டுத்தொகை இரண்டாவது தொடரின் கூட்டுத்தொகையை விட (எல்லா ஒற்றை எண்களின் கூட்டுத் தொகையாலும்) அதிகமாக இருக்க வேண்டும்.

ஆனால் —

இன்னொரு வகையாகச் சிந்தித்துப் பார்த்தால் —

முதலாவது தொடரில் உள்ள ஒவ்வொரு இலக்கத்தினதும் இரண்டு மடங்கான எண்களே இரண்டாவது தொடரில் இருக்கின்றன. எனவே இரண்டாவது தொடரின் கூட்டுத்தொகை முதலாவது தொடரின் கூட்டுத் தொகையை விட இரண்டு மடங்காக இருக்க வேண்டும்.

அப்படிச் சிந்தித்தால் முதலாவது தொடரின் கூட்டுத்தொகை பெரிதாக இருக்கிறது. இப்படிச் சிந்தித்தால் இரண்டாவது தொடரின் கூட்டுத் தொகை பெரிதாக இருக்கிறது.

எது சரி?

இங்கே நாம் ஒன்றை அவதானிக்க வேண்டும். இரண்டு தொடர்களுமே முடிவிலி வரைக்கும் செல்லுகின்றன.

இரண்டு தொடர்களின் கூட்டுத் தொகையுமே 'முடிவிலி' என்பது தான் சரியான விடை.

சாதாரணமான கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல் என்பவற்றில் நாம் காணும் உண்மைகள் ஒரு குறிப்பிட்ட எல்லைகளுக்குள் தான் சரியாக இருக்கும்.

எல்லைகளுக்கு அப்பால் முடிவிலி வரைக்கும் சென்று நமது விதிகளை பிரயோகிக்கும் போது அவை பொய்த்து விடும்.

இது கணித உண்மையே யாயினும், சமய தத்துவ உலகிலும் கைக்கொள்ளப்பட வேண்டிய மிகப் பெரிய உண்மை என்பதை நாம் விளங்கிக் கொள்ளும் போது பல புதிய உண்மைகள் நமக்குப் புரிய ஆரம்பிக்கும்.

* * * * சாமிஜி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெட்டி ஒட்டும் கத்தி (LASER)

✱ இரத்தினசபாபதி ஸ்ரீராகவன் ✱

Light Amplification Stimulated Emission of Radiation என்பதின் முதல் எழுத்துச் சுருக்கமே Laser என்பதாகும். லேசர் என்பது சற்றே விசேடமான ஒளிக்கற்றை சாதாரண ஒளியை விட நுட்பமான சிரான ஒளி- பூமியில் இருந்து சாதாரண ஒளியை வைத்து பிரகாசமான குவியம் வைத்து சந்திரன் மேல் அடிக்கின்றார்கள். என வைத்துக் கொண்டால், என்ன தான் வில்லைகளை வைத்து சாதாரண ஒளியினைச் சீர்படுத்தினாலும் சந்திரனுக்குப் போய்ச் சேரும் போது அந்த ஒளி பரவி சந்திரனை விடப் 10 மடங்கு பெரிதாகி விடும். இதையே Laser ஒளியை வைத்துக் கொண்டு செய்தால் சந்திரனின் மேல் அந்தக் கற்றை சுமார் 6 Km தான் பரவும். இங்கிருந்து சந்திரனுக்கான தூரம் 3 லட்சத்து 84 ஆயிரத்து 400 கி.மீ. குறுக்களவு 3.476 கி. மீ. லேசருக்கு வித்திட்டவர் சாள்ஸ்டவுண் என்கிற அமெரிக்கர். 1953 இல் இவர் 'மேஸர்' என்ற ஒன்றைக் கண்டறிந்தார். Russia இல் பஸோவ் ப்ரொக்கரோவ் போன்றோருப் இவ் ஆராய்ச்சியில் முக்கியமானவர்கள் மூவருக்கும் இதற்காக நோபல் பரிசும் கிடைத்தது. இவற்றின் அடிப்படையில் இருந்து 1960 இல் தியோடத் ஹெரால்ட் மெய்மன் என்பவர் முதல் லேசரை உருவாக்கினர்.

லேசரை பயன்படுத்தி வானில் பறக்கும் றொக்கற் போன்றவற்றை சுட்டு வீழ்த்த முடியுமா என முதலில் ரஷியாவும் அமெரிக்காவும் போட்டி போட்டுக் கொண்டு, ஆராய்ந்து பார்த்தன. இதனடிப்படையில் அழிவாயுதங்கள் தயாரிக்கப்பட்டு விட்டதாகக் கூட கேள்வி. எனினும் இதற்கு தற்போதைய நிலையில் சமாதான உபயோகங்கள் தான் அதிகம். வைத்தியநிபுணர்கள் சத்திர சிகிச்சைகளின் போது நுட்பமான வேலைகளுக்கு இதனைப் பெரிதும் நம்பிப்பயன்படுத்துவதால் இதனை மருத்துவ உலகின் வெட்டி ஒட்டும் கத்தி என அழைத்தால் அது மிகையன்றே?

## அப்ரடைட்டி (Aphrodite)

உரோமானியர்களால் 'வீனஸ்' தேவதை என்றும், கிரேக்கரால் காதல் தேவதை என்றும் அழைக்கப்படுபவள் அப்ரடைட்டி. கடல் நுரையில் பிறந்ததால் இந்தப் பெயர் பெற்றாள் என்று கூறப்படுகின்றது.

உலகின் தலை சிறந்த சிற்பிகள் இவருக்குப் பல சிலைகள் செய்துள்ளனர். அவற்றுள் பாரிஸில் லூவர் பொருட்காட்சியுள்ள 'வீனஸ்' சிலை உலகப் புகழ் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. 'அப்ரடைட்டி' என்ற பெயரை விட 'வீனஸ்' என்ற தேவதையின் பெயர் பிரசித்தமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீமை அத்தி

இது ஒரு வகை பழம். மேற்கு ஆசியாவிலும் தென் ஐரோப்பாவிலும் உள்ள மக்களுக்கு ஒரு முக்கிய உணவுப் பொருளாக இச்சீமை அத்திப்பழம் விளங்குகின்றது. இதனை பச்சையாகவும், உலர்த்தியும் கூட பயன்படுத்துவார்கள். மருந்துக்கும் கூடப் பயன்படும்.

அத்தி மரத்தின் தோற்றமே ஒரு விதமான அழகு தான். 20, 30 அடி வரை வளரும் இதன் அடிமரம் குட்டையாக இருக்கும். கிளைகள் அதிலிருந்து அகன்று பரவி குடை போல விரிந்திருக்கும். இதன் இலைகளும் வித்தியாசமானவை. மற்ற இலைகளைப் போல ஒரே முழு விளிம்புள்ளனவாக இல்லாமல் ஐந்து பிளவுகளைக் கொண்டதாக இருக்கும்.

சீமை அத்தி மரங்கள் இந்தியா முதல், தென் பாரசீகம் தென்மேற்கு ஆசியா போன்ற நாடுகளிலும் அதிகமாகப் பயிர் செய்யப்பட்டு வருகின்றது. இந்த அத்தி மரத்தில் பலவகை உண்டு. உயர்ந்த சாதி தாழ்ந்த சாதி என்றெல்லாம் பார்த்துப் பயிரிடுவார்கள். அத்தி மரங்களி லெல்லாம் உயர்ந்தது 'ஸ்மர்னா' அத்தி. சாதிவேற்றுமை இந்த மரங்களையும் விடவில்லை.

ஆனால் சீமை அத்திக்கு மகரந்தச் சேர்க்கை இன்றி யமையாதது. இதில் பெண் பூக்கள் மட்டுமே இருப்பதால் காட்டு அத்திகளிலுள்ள அத்திப் பூச்சிகளை இவற்றுடன் இணைப்பதற்காக காட்டு அத்திமரக் கிளைகளை வெட்டிக் கொண்டு வந்து 'ஸ்மனர்' அத்தி மரத்துடன் இணைப்பர். இதன் பின்பு பழங்கள் உண்டாகும். இந்த அத்தி மரங்கள் ஆண்டுக்கு இரு தடவை, மூன்று தடவை பழுக்கும். அத்திக் கிளையை சிறிது சிறிதாக நறுக்கிப் பயிரிடுவர்.

நல்ல சுவையான பழமாக மட்டுமல்லாமல் சிறந்த மருந்தாகவும் இந்த அத்திப் பழம் இருக்கின்றது

## உலகில் பெரிய மதம்

கிறிஸ்தவ மதத்தினர் தான் உலகில் மிக அதிகம். 110 கோடி மக்கள் கிறிஸ்தவர்களாக இருக்கிறார்கள். அடுத்தது இஸ்லாமியர் 60 கோடிப்பேர். இந்து மதத்திற்கு மூன்றாவது இடம் தான் 50 கோடிப்பேர் இந்துக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருந்துமா?

i) **அரச பணி** –(On His Majesty Service) அரசர் பணி — அரசபணி இச்சொற்றொடர், இலங்கை, பிரித்தானிய அரசரின் ஆட்சியின்கீழ் இருந்த காலத்துக்குப் பொருந்தும். இன்று மக்களாட்சி இங்கு நிலவுவதாகக் கூறப்படுகின்றது. அதற்கேற்ப, 'On State Service' என்று ஆங்கிலத்தில் வழங்குவது அரச(ர்) பணியாகுமா? **'அரசுப்பணி'** என்று கையாளலாமே!

ii **அதிகாரி** (Officer) Office என்பதற்கு **'அலுவலகம்'** என்று மொழி பெயர்த்த பின், 'Officer' - **அலுவலர்** என்று மொழி பெயர்ப்பது தானே பொருத்தம்? 'அதிகாரி' என்ற சொல் உளவியல் அடிப்படையில் அப்பதவியை வகிப்பவருக்கு ஓர் உயர்வுச்சிக்கலை (Superiority Complex) ஏற்படுத்தாதா?

iii) **ஜனாதிபதி** (President)— ஜனங்கள் தங்களின் நலங்கருதித் தெரிந்தெடுக்கும் ஒருவர் அவர்களுக்குத் தலைவராய் அமர்ந்து வழி நடத்தலாம். அவர் 'அதிபதி' என்பது பொருந்துமா? 'ஏகாதிபத்தியம்' என்ற சொற்றொடரையொத்து, இஃது ஆதிபத்தியம் செலுத்துபவர் என்னும் வெறுத்தற்குரிய பொருளைத் தரவில்லையா? மக்கள் முதல்வர் குடியரசுத் தலைவர் போன்ற சொற்றொடர்கள் அவரின் 'அதிகாரங்களை' வரையறை செய்து தணிப்பதாய் அமையாதா? (ஜன + அதிபதியும் மக்கள் தலைவர் போன்று இரு சொற்களாலான தொடர் தான்)

iv) **முதுகலைமாணி, முதுதத்துவமாணி**— Master of Arts Master of Ph'osophy) மாணி (பிரமச்சாரி), ஆங்கிலத்தில் Bachelor என்பதைத் தமிழ்ப் படுத்திய சொல். Bachelor of Arts, Bachhelor of Sclence என்பன முறையே கலைமாணி, விஞ்ஞானமாணி என மொழி பெயர்க்கப்பட்டு வழங்குகின்றன. ஆதே 'மாணி' யை Master என்பதற்கும் வழங்கலாமா? கலை வல்லுநர், விஞ்ஞான வல்லுநர் என்றோ கலை அறிவர், விஞ்ஞான அறிவர் என்றோ வழங்கலாமே!

'சோனா'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவுப் போட்டி - 36

**பரிசு ரூபா200**

**வினாக்கள்**

1. இந்த ஆண்டில் நடைபெற்ற அணி சேரா நாடுகளின் மகா நாடு, எந்த நாட்டில் நடைபெற்றது?
2. உயிர்மெய் எழுத்துக்கள் என்பவை எப்படி உருவானவை? தமிழ்மொழியில் எத்தனை உயிர்மெய் எழுத்துக்கள் உள்ளன?
3. சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமர் யார்?
4. அத்திலாந்திக் சமுத்திரத்தையும் பசுபிக் சமுத்திரத்தையும் பிரிக்கும் கால்வாய் எது?
5. 'வாக்குண்டாம்' என்ற நூலை ஆக்கியவர் யார்? அவர் ஆக்கிய இன்னொரு நூலின் பெயர் என்ன?
6. மனிதர்களுக்கு ஒரு முறை வந்து குணமாகி விட்டால் மீண்டும் வராத நோய் எது?
7. விடுதலைப் புலிகள் இயக்கத்தில் முதலாவது கரும்புலித் தாக்குதலை நடத்தியவர் யார்? எந்த ஊரில் அத்தாக்குதல் நடந்தது?
8. சிட்னி என்ற நகரம் எந்த நாட்டில் உள்ளது?
9. பாரங்களைச் சுமந்து கொண்டு மலைகளில் ஏறிச் செல்லக் கூடிய மிருகம் எது?
10. 'சிற்பி,' 'சொக்கன்,' 'செங்கை ஆழியான்' — இந்தப் புனை பெயர்களில் எழுதும் மூன்று பிரபல எழுத்தாளர்களினதும் சொந்தப் பெயர்கள் எவை?

---

பொது அறிவுப் போட்டி - 36 க்கான விபரங்களை 25 ஆம் பக்கத்தில் பார்க்க (போட்டி முடிவுகள் 29 ஆம் பக்கத்தில்)

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லைநாதன் கோபிநாத் — யாழ் இந்துக்கல்லூரி

# முதல் ரெஸ்ற் துடுப்பாட்டம்

எமது நாட்டிலே அதிகம் பிரபலமடைந்துள்ள ஒரு விளையாட்டு கிரிக்கெட். தற்காலத்தில் விறுவிறுப்புத் தன்மை காரணமாக ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளே அதிகம் இரசிக்கப்படுகின்றன. எனினும் பாரம்பரியச் சிறப்பு மங்காமல் இன்றும் மதிக்கப்படுவது 5 நாட்களில் விளையாடப்படும் "ரெஸ்ற்' கிரிக்கெட் ஆட்டங்கள் தான்.

ரெஸ்ற் போட்டிகளுக்கு சுமார் 121 வருட வரலாறு உண்டு. இப்போது இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, இந்தியா, மேற்கிந்தியத் தீவுகள் பாகிஸ்தான், நியூஸிலாந்து, இலங்கை மற்றும் சிம்பாவே ஆகிய 9 அணிகளால் வருடந்தோறும் பல ரெஸ்ற் ஆட்டங்கள் ஆடப்படுகின்றன இவற்றை இரசிக்கும் பலருக்கு உலகின் முதல் ரெஸ்ற் போட்டி பற்றித் தெரியாதுள்ளது.

1877 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் திகதி காலை நேரம் ஆம்! அப்போது தான் உலகின் முதல் ரெஸ்ற் போட்டி அவுஸ்திரேலியா- இங்கிலாந்து அணிகளுக்கிடையே அவுஸ்திரேலியாவின் Melbourne நகரில் ஆரம்பமானது. பூவா தலையா போட்டுப் பார்த்ததில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலியா முதலிற் துடுப்பெடுத்தாடி 245 ஓட்டங்களைப் பெற்றது. Charles Bannerman 165 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்று உலகின் முதற் சதம் பெற்ற வீரரானார்.

பின்னர் ஆடிய இங்கிலாந்து அணி 196 ஓட்டங்களைப் பெற்றது. இரண்டாவது இனிங்ஸில் அவுஸ்திரேலியா தடுமாறியது.

Bannerman வெறும் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க அணி 104 ஓட்டங்களுடன் துவண்டது.

154 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து அணி முதல் 22 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களை இழந்தது. மொத்தமாக 108 ஓட்டங்கள் பெற்ற நிலையில் அனைவரும் ஆட்டமிழந்தனர். ஆதலால் அவுஸ்திரேலிய அணி 45 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலியா பின்னாளில் பல வெற்றி தோல்விகளைச் சந்தித்திருக்கின்றது. எனினும் அவுஸ்திரேலிய இரசிகர்கள் முதல் ரெஸ்ற் போட்டியிற் பெற்ற வரலாற்று வெற்றியை இப்பொழுதும் மகிழ்வுடன் நினைவு கூர்கின்றார்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் இன்றி நீயில்லை

21 ஆம் பக்கத் தொடர்

அன்னைக்கு ஏற்படும் நோய் கள் அவர் பாவிக்கும் மருந்துகள் எல்லாமே உங்களுக்கு ஆபத்தை உண்டு பண்ண வல்லன. காரணம் உங்களை இரட்சிக்க நானில்லாததுதான். எனவே தான் கருவுற்ற பெண்கள் முதல் மூன்று மாதகாலமும் கவனமாக இருக்க வேண்டும் என்று மருத்துவ வல்லுனர்கள்கூட ஆலோசனை கூறுகிறார்கள்

பத்தாம் மாதமளவில், அதாவது நீங்கள் பூமியில் ஜனனமாகத் தயாராகிக்கொண்டிருக்கும் வேளையிலே நான் வட்ட வடிவமாகவும் 20 சென்றி மீற்றர் விட்டமும் 25 சென்றி மீற்றர் தடிப்பும் 500 கிராம் நிறையும் கொண்டிருப்பேன். கருக்குழியில் எனக்கும் உங்களுக்கும் இடையில் நாபிக்கொடி (நஞ்சுக் கொடி) மூலம் தொடர்பு இருக்கும். பூமியில் நீங்கள் பிறந்ததும் என்னுடைய வேலை (உங்களைக் கருப்பையில் இரட்சித்த வேலை] முடிந்து விடும். அந்தத் திருப்தியுடனே அடுத்த பதினைந்து நிமிடத்திற்குள் நானும் கருப்பையில் இருந்து வெளியேறிவிடுவேன். உங்களுக்கு இராச உபசாரம் நடந்து கொண்டிருக்கும் வேளையில் நான் கழிவுத்தொட்டிக்குள் வீசப்பட்டிருப்பேன்! ஆயினும் என்ன? உங்களை உருவாக்கி உலகுக்கு கொண்டுவர உதவ முடிந்ததே, அந்தத் திருப்தி ஒன்றே எனக்குப் போதும்.

---

# அக்பரின் ‘ தின் இலாஹி ’

இந்தியாவில் தைமூர் மரபில் வந்த புகழ் பெற்ற அரசரான அக்பரால் தோற்றுவிக்கப்பட்ட புதிய சமயமே ‘தின் இலாகி’ யாகும். இந்த அக்பர் வேறுபட்ட பல சமயங்களிடையே ஒற்றுமையைக்காண விழைந்தார். இஸ்லாம் மட்டுமன்றி பிற சமயங்களையும் இவர் கற்றறிந்தார். அவற்றின் சிறந்த கருத்துக்களை ஒன்று திரட்டி ‘தின் இலாகி’ என்ற புதிய சமயத்தை அமைத்தார். இது குர் ஆன், வேதம் இதிகாசம், பைபிள் முதலியவற்றின் தொகுப்பு என ‘பார்ட்டோவி’ என்ற கிறிஸ்தவ ஆசிரியர் கூறுகின்றார். அக்பர் யார் மேலும் இம் மதத்தை திணிக்கவில்லை. அக்பரின் பரந்த மதக் கொள்கைக்கு இத்‘ தின் இலாஹி ’ சிறந்த எடுத்துக் காட்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணக் காவியம்

'சாவில் தமிழ் படித்துச் சாகவேண்டும் — என்
சாம்பல் தமிழ் மணந்து வேகவேண்டும்'

என்ற தமிழ் எழுச்சிப் பாடல் அடிகளை அறியாதவர் சிலரே. இப்பாடலை யாத்த கவிஞர் க. சச்சிதானந்தன், மதுரைத் தமிழ்ப் பண்டிதர். இலண்டன் பல்கலைக் கழகத்தின் கலைமாணி (சிறப்பு) முதுதத்துவ அறிஞர் (M. Phil) பட்டங்கள் பெற்றவர். பலாலி ஆசிரியர் கலாசாலையில் உளவியல் விரிவுரையாளராயும், உப அதிபராயுமிருந்து ஓய்வு பெற்றுள்ள இவ்வறிஞர் கணித விற்பன்னராயும், சிறந்த ஆய்வாளராயும் விளங்குவதும் குறிப்பிடத் தக்கதாகும். சென்ற ஆண்டு யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் இவரது 'தமிழர் யாழியல்' என்ற ஆய்வேட்டினை வெளியிட்டது. இவ்வாண்டில் 'யாழ்ப்பாணக் காவியம்' என்ற பெரு நூல் நவயோக அச்சகத்தில் அச்சாகி வெளி வந்துள்ளது.

அடிமைப் பருவம், ஆயத்தப் பருவம், போர்ப் பருவம், இன்பப் பருவம் என்ற நான்கு பெரும் பிரிவுகளும், மறைக்காட்டுப் படலம் தொடக்கம் பரிசளித்த படலம் ஈறாக முப்பத்தெட்டுச் சிறு பிரிவுகளும் கொண்டு 2035 பாடல்களும் கொண்டதாய் இக்காப்பியம் விளங்குகிறது.

கி.பி. 1450 - 1467 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட யாழ்ப்பாண அரசின் வரலாற்றினை அடித்தளமாகக் கொண்டு பொருத்தமான கற்பனைகளையும், ஆங்காங்கே புகுத்திச் சொல் நயம், கவி நயம் மிக 'யாழ்ப்பாணக் காவியத்தை' சச்சிதானந்தன் அவர்கள் இயற்றியுள்ளமை பெரிதும் பாராட்டத் தக்கது.

இக்காவியத்திலிருந்து வகை மாதிரிகளாய் இரு பாடல்கள் கீழே தரப்படுகின்றன.

ஏழை என்பவர் யாருளர் இந்நிலம்
ஆளு கின்ற அரசனும் தானென
தோளு யர்த்தினர் துள்ளினர் ஒவ்வொரு
வாழு கின்றவச் செந்தமிழ் மக்களே.

மழித்திடுவார் வளர்த்த மயிர் வஞ்சினமும் முற்றுதலால்
கிழித்திடுவேல் மார்பேற்றுக் களம் புகுந்து கிடப்பதற்கே
எழுத்திருக்க வில்லையென இகழுகிறார் ஆடவரில்
பழுத்திருக்கும் முதியவரும் பாலியரில் மெலிந்தோரும்.

சொக்கன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைப் பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. தெரிந்தவர்களும் என்னைப் பற்றி மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்வதில்லை. எனவே, என்னைப் பற்றி —என் கதையை நானே உங்களுக்குச் சொல்லி விடப் போகிறேன். ஏனெனில் உலகத்தின் முதல் மனிதப் பிறவிகளான ஆதி, பகவன் அல்லது ஆதாம் ஏவாள் தவிர(குரங்கிலிருந்து மனிதன் தோன்றினான் என்ற கருத்தை ஏற்காதவர்களுக்காக). மற்ற மனிதர்கள் அனைவருக்கும் ஒரு உண்மை தெரிந்தேயாக வேண்டும். அது தான் 'நான் இன்றி நீங்கள் இல்லை' என்பது.

கருப்பைக் குழிக்குள் அழுந்தித் துன்புறும் பிறவிகள் வேண்டாம் என்று சித்தர்களும், ஞானிகளும் பாடி வைத்துள்ளதை நீங்கள் படித்திருப்பீர்கள். அந்தக் கருக்குழிக்குள் நீங்கள் வருந்திய காலத்தில் உங்களுக்கு ஒரேயொரு ஆதரவாக இருந்தது நான் மட்டுமே!

''முந்தித் தவங்கிடந்து முந்நூறுநாள்ளவும் அந்தி பகலாச் சிசுவை யாதரித்து பெற்ற தாயார்—' என்று கருவிலே நீங்கள் கிடந்த காலத் தொட்டு உங்களைப் பாராட்டிச் சீராட்டி வளர்த்த தாயாரின் பெருமையைப் பட்டினத்தார் புகழ்ந்திருக்கிறார். ஆனால், நீங்கள் கருவில் கிடந்த அந்தக் காலத்தில் உங்களுக்கும் உங்கள் தாயாருக்கும் இடையில் தொடர்பு சாதனமாகப் பயன் பட்ட என்னை ஏனோ எல்லோரும் மறந்து விடுகிறார்கள். ஒரு வகையில் சொல்லப் போனால் ''பால் நினைந்தூட்டும் அந்தத் தாயிலும் என்னுடைய சிறப்பு ஒரு படி மேலானது''

ஏனென்று கேட்கிறீர்களா?

நீங்கள் கருவாய் உருவாகி ஒன்றையும் உணர முடியாமல் ஒன்றுமே தெரியாமல், ஒன்றுமே புரியாமல் கருக்குழிக்குள் வாழ்ந்த அந்தக் காலத்தை ஒரு முறை நினை

# நானின்றி

டாக்டர்

சே. சிவசண்முகராஜ்

வூட்ட விரும்புகின்றேன் அப்போது உங்களுக்கு நல்லது எது கெட்டது எது என்றுதெரியாது. எது தேவை, எது தேவையில்லை என்று தெரியாது. அப்படியான ஒரு நிலையில் உங்களுக்காக உங்கள் நலனுக்காக செயற்பட்டது வேறுயாருமல்ல சாட் சாத் நானே தான்.

உங்களுக்குத் தேவையான போஷாக்குச் சத்துக்களை உங்கள் தாயாரின் இரத்தத்திலிருந்து பிரித்தெடுத்துத் தந்தது நான்.

உங்களுக்குத் தேவையான பிராணவாயுவான ஒட்சிசனைப் பெற்றுத் தந்தது நான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் பூமியில் ஜனித்த பிறகு உங்களுக்குச் சில பாரதூரமான தொற்று நோய்கள் வரக் கூடாது என்பதற்காக (முக்கியமாக ஏர்ப்பு வலி) சிலவகைத் தடுப்புப் பொருட்களை (I mun globulin) உங்கள் தாயாரின் இரத்தத்திலிருந்து பெற்றுத் தந்திருக்கிறேன்.

உங்கள் பிஞ்சு உடலில் உண்டான கழிவுப் பொருட்களையும், காபனீரொட்சைட்டு வாயுவையும் உங்கள் தாயாரின் இரத்தத்தில் சேர்த்து வெளியேற்ற உதவியதும் நானே.

# நீயில்லை

உங்கள் தாயாரின் இரத்தத்தில் நோய்க்கிருமிகள் இருந்தால், அவை உங்களை அடையவிடாமல் பாதுகாப்பதும் நானே தான். என்றாலும் இவ்விடயத்தில் என்னால் முழுமையாகப் பெருமை கொள்ள முடியாமல் இருக்கிறது. காரணம் சிபிலிஸ் (Syphilis) எனப்படும் மேக நோய்க் கிருமிகளோ, அல்லது மலேரியாக் கிருமிகளோ, அல்லது ஜேர்மன் சின்னமுத்துக் (German

## ஒரு சூல் வித்தகத்தின சுயசரிதை

Measeles) கிருமிகளோ ஒரு தாயின் இரத்தத்தில் இருந்துவிட்டால் அவை உங்களை (சிசுவை) அடையாமல் தடுக்கும் சக்தி எனக்கில்லை இது இறைவன் எனக்கு ஏற்படுத்திய கர்வ பங்கம் என்றே நினைக்கிறேன். இன்னும் நான் உங்கள் கர்ப்பப்பை வாழ்க்கைக் காலத்தில் செய்த உதவிகளை-தொழில்களைக் கூறிக் கொண்டே போனால் இது ஒரு மருத்துவக் கட்டுரையாகி விடும் என்று அஞ்சுகிறேன்.

நான் யார் என்பதை விஞ்ஞானம் கற்கும் மாணவர்கள் இதுவரையில் ஊகித்திருப்பார்கள் என நம்புகி றன். நான் தான் சூல்வித்தகம். ஆங்கிலத்தில் என் காப் Place ta என அழைப்பார்கள்.

ஒருவருடைய முக்கியத்துவத்தை அவர் இல்லாத போது தான் உணரமுடியும். அது போல என்னுடைய முக்கியத்துவத்தையும் நான் இல்லாத காலப்பகுதியில் தானே உணரமுடியும்?

உங்கள் தாயின் கருப்பையில் நீங்கள் கருவாக உருவாகி ஏறத்தாள மூன்றாம் மாதமளவிலேயே நான் உற்பத்தியாகிறேன். நானில்லாத அந்த மூன்று மாதமும் உங்கள் வாழ்க்கையின் சோதனைக் காலம்! அந்தக் காலத்தில் உங்கள் அன்னையின் செயல் முறைகள்

தொடர்ச்சி 18 ஆம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வால் டிஸ்னி

23 ஆம்பக்க தொடர்

பெறும் வண்ணம் உயர்ந்தனவாய் இருந்தன.

எலியையும், வாத்தையும், முயலையும் நாயையும், பன்றியையும் சித்திரங்களாக்கி அவற்றிற்கு மனிதத் தன்மையை ஊட்டி அவற்றை ஆடவும், பாடவும் பேசவும் வைத்து உயிரோட்டம் அளித்தவர் டிஸ்னி. முதன் முதலில் மிருகங்களையும் பறவைகளையும் அவை வாழும் சூழ்நிலைகளுடன் அறிமுகப்படுத்தியவர். திரைப்படத்தில் புரட்சிகரமான கண்டு பிடிப்புக்கள் செய்த அற்புத மனிதர் அவர்.!

திரைப்பட வரலாற்றிலே எவருமே பெற்றிராத பரிசுகளைப் பெற்றவர். குழந்தைகள் முதல் பெரியவர் வரை சாதாரண மனிதன் முதல் ஜனாதிபதி வரை அனைவரையும் தமது திறமையினால் கவர்ந்தவர். இன்றைய உலகில் வால்ட் டிஸ்னி என்றால் தெரியாதவர்கள் எவருமே இருக்க முடியாது என்றால் அதற்கு ஏழ்மையில் பிறந்தாலும் விடா முயற்சியுடன் உழைத்து முன்னுக்கு வர வேண்டும் என்ற முயற்சிதான் காரணம்.

---

## பியூல் நாடோடிகள்

ஆபிரிக்காக் கண்டத்தில் நைஜர், நைஜீரியா, கமெரூன், மாலி, சூடான், கினியா போன்ற நாடுகளில் வாழும் 'பியூல்' நாடோடி மக்கள் சற்றே வித்தியாசமானவர்கள். இவர்கள் மத்தி ஆபிரிக்க நாடோடிகளை விட வெளிர்நிறம் உடையவர்கள். இவர்களிடம், ஆட்டு மந்தைகளும், மாட்டு மந்தைகளும், ஒட்டகங்களும் ஏராளமாக உண்டு. அத்துடன் பொதி சுமக்கும் கழுதைகளும், ஏராளமாக வைத்திருக்கின்றார்கள். இவர்கள் நாடோடிகளாக இருந்தாலும் இவர்களது வாழ்க்கை திட்டமிட்டதாக இருக்கும். ஆண்கள் கால்நடைகளை வளர்ப்பதிலும் மேய்ச்சல் நிலம் எங்கே இருக்கின்றது என்பதைக் கண்டு பிடிப்பதிலும் ஆர்வமாக இருக்க, பெண்கள்,ஆடுமாடுகளில் இருந்து பால் கறத்தல், பாலாடை தயாரித்தல், வெண்ணெய் எடுத்தல் போன்ற வேலைகளில் ஈடுபடுவார்கள். இவர்களிடையேயும் அந்தஸ்து வேறுபாடு உண்டு. நான்கைந்து மந்தைகள் வைத்திருப்பவர்கள் பெரும் பணக்காரர்களாக இருப்பர். இவர்கள் தம் இஷ்டம் போல பல பெண்களை மணம் முடிக்கலாம். இவர்களின் திருமணமுறை இரண்டு மாதிரியாக உள்ளது. காதல்திருமணம் என்றால் பெற்றோர் பச்சைக் கொடி காட்டி விடுகிறார்கள். அதே நேரம் இருவருக்கும் போதுமான தகுதியுள்ளவர்களா என ஆராய்ந்தே திருமணம் செய்விக்கிறார்கள். ஒரு பெண்ணுக்கு இரண்டு பேர் போட்டியிட்டால் இரு இளைஞர்களுக்கும் போட்டிவைப்பார்கள். வெல்பவனுக்கு மணமகள் மாலையிடுவாள். இவர்களது நாடு வரட்சியானதால் மழைக்காலமே இவர்களுக்கு கோலாகலமான காலம்.

நன்றி: 'தினக்குரல்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைப்பால் உயர்ந்த

# வால்ட் டிஸ்னி

✱ கண. ஸ்ரீலகாருண்யம் ✱

ஏழ்மையில் பிறந்து முயற்சியால் உயர்ந்த உலகத்தின் பெரும் பணக்காரர்களில் ஒருவராக விளங்கியவர் தான் வால்ட் டிஸ்னி. அவருடைய வாழ்க்கை வரலாறு 'முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்' என்பதற்கு ஒரு எடுத்துக் காட்டு.

ஓவியர்களிலே யாரும் அடைய முடியாத புகழ் ஏணியின் உச்சியை வால் டிஸ்னி மட்டும் எப்படி அடைந்தார் என்றால் அவருடைய முயற்சிகளும் ஓய்வில்லாத உழைப்பும் தான் காரணம். எட்டாம் வகுப்பு வரை படித்த அவர் வேலைக்காக அலைந்து தோல்வியைக் கண்டபோதும் மனம் வருந்தி சோம்பி இருந்திடவில்லை! பத்திரிகைகள் விற்றார்! பிண வண்டிகளைக் கழுவி பணம் சம்பாதித்தார். அதன் மூலம் கிடைத்த பணத்தைக் கொண்டு ஓவியக் கலையைக் கற்றார்.

டிஸ்னியின் தந்தையார் தச்சு வேலை செய்பவர். இரண்டு அறை கொண்ட வீடு. எட்டாம் வகுப்பு வரை படிக்க முடியாவிட்டாலும், சோம்பிக் கிடக்காமல் தொழிற்சாலை ஒன்றில் வேலைக்குச் சேர்ந்தார். வேலையில் கிடைத்த பணத்தை மிச்சம் பிடித்து ஓவியக் கல்லூரியில் சேர்ந்தார். ஓவியம் நன்றாகக் கற்றுக் கொண்டதும் ஓவியக் கம்பனி ஒன்றில் சேர்ந்து பணியாற்றினார். 'கார்டூன்' வரைவதில் மிகவும் திறமை சாலியாகி விட்டார். கார் நிறுத்தி வைக்கும் இடத்தை தன்னுடைய கலைக் கூடமாக ஆக்கிவிட்டார். இரவு நெடுநேரம்வரை சித்திரம் வரைந்து கொண்டு இருப்பார்.

சுண்டெலி அவருக்கு அருகில் வந்து விளையாடியதை அவதானித்த அவர் சுண்டெலியை கதாநாயகனாக வைத்து படங்களை தயாரித்தால் என்ன என்று யோசித்தார். அதன் பயன் 'மிக்கி மவுஸ்' (Mickey Mouse) என்று பெயரிட்டார். அந்தப் பெயர் கொண்டு 'தி பாண்டு கான் சொட்' என்ற படத்தை எடுத்தார். இந்தப் படத்திற்கு ஒஸ்கார் விருது கிடைத்தது. இதுமட்டு மல்லாமல் குழந்தைகளுக்காக 'டிஸ்னி லான்ட்' என்ற குழந்தைகளுக்கான கண்காட்சியை உருவாக்கினார். டிஸ்னி ஸ்ருடியோவையும் அமைத்தார். இவருடைய கண்டு பிடிப்புக்கள் அடுத்தடுத்து ஒஸ்கார் விருது

தொடர்ச்சி 22ம்பக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவும் ஆளுமையும்

நிறையப் படித்து எல்லா விஷயங்களையும் சரிவரத் தெரிந்து கொண்டவர்கள் எந்தச் செயலையும் திறம்பட நிர்வகித்து நடத்துவார்கள் என்று சிலர் நினைக்கிறார்கள். அது தவறு.

இப்படித்தான் சுமார் 2700 ஆண்டுகளுக்கு முன்பு கிரேக்க நாட்டினர்கள் நினைத்தார்கள். சிறந்த அறிவாளி ஒருவரை தங்கள் நாட்டின் ஆட்சியாளராக நியமித்தால் நல்ல, சிறப்பான ஆட்சி நடக்குமென்று நினைத்தார்கள்.

அதன்படி தங்கள் நாட்டிலேயே சிறந்த அறிவாளியான டெமிட்ரியன் என்பவரை நாட்டின் ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தினார்கள். டெமிட்ரியன் மிகப் பெரிய அறிவாளி. எல்லா விஷயங்களையும் தத்துவப் பள்ளியில் படித்துத் தேறியவர். சிறந்த தத்துவ ஞானியான பிளேட்டோவின் மாணவர்.

டெமிட்ரியன் பத்து ஆண்டுகள் ஏதென்ஸ் நகரத்தை ஆண்டார். அடிக்கடி சட்டங்களை மாற்றுவதும், புதுப்புதுச் சட்டங்களைப் போடுவதுமே அவருடைய வேலையாக இருந்தது. ஆனால் நாடு எந்தவிதத்திலும் முன்னேறவில்லை. அவருடைய ஆட்சியைப் பற்றிக் குறிப்பிட்ட வரலாற்று ஆசிரியர்கள், 'டெமிட்ரியன் ஆட்சியில் என்ன நடந்தது என்றால் — — எதுவுமே நடக்கவில்லை!' என்று சுருக்கமாக கருத்தாழத்துடன் சொல்லியிருக்கிறார்கள்.

பத்து ஆண்டுகள் பொறுத்துப் பார்த்த நாட்டு மக்கள், டெமிட்ரியனை பதவியிலிருந்து துரத்தி விட்டார்கள்.

டெமிட்ரியன் எகிப்து நாட்டுக்கு ஓடிப் போய், புகழ் பெற்ற அலெக்சான்டிரியா நூலகத்தில் நூலகராகக் கடமையாற்றினார். பிறகு அதிலும் வெறுத்துப் போய் கொடிய விஷமுள்ள நாகபாம்பைத் தன்மீது கடிக்க விட்டு இறந்து போனார். மெத்தப் படித்த புத்திசாலியின் கதை இது!

இப்படித்தான் பல விமர்சகர்கள் இருக்கிறார்கள். செய்து முடிக்கப்பட்ட ஒரு பொருளில் மிக நுணுக்கமாகக் குற்றங் குறைகளைக் கண்டு பிடித்துச் சொல்கிறார்கள். ஆனால் அவர்களால் ஒரு சிறு பொருளைக் கூட உருப்படியாகச் செய்ய முடியாமலிருக்கும்.

சிறு கதைகளைப் பற்றி மிகச் சிறப்பாக விமர்சனம் செய்த ஒரு படிப்பாளியிடம் ஒரு பத்திரிகையின் ஆசிரியர் ஒரு நல்ல சிறு கதை எழுதித் தரும்படி கேட்டார்.

விமர்சகரும் தம்முடைய சட்ட திட்டங்களுக்கு அமைவாக ஒரு சிறு கதையை எழுதிக் கொடுத்தார்.

பத்திரிகை ஆசிரியர்பாடு பெரிய தர்ம சங்கடமாகப் போய் விட்டது. அந்தச் சிறு கதையைத் தமது பத்திரிகையில் வெளியிட்டால் பத்திரிகையின் தரம் என்னாகும் என்று அவர் கவலைப்பட ஆரம்பித்தார்.

கபிலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது அறிவுப் போட்டி விபரங்கள் —

- தரப்பட்ட பத்து வினாக்களுக்கும் சரியான விடைகளைத் தனித் தாளில் எழுதி, அத்தாளிலேயே அனுப்புபவரின் பெயரும் முகவரியும் எழுதப்படல் வேண்டும்.
- விடைகளை அனுப்பும் போது விடைத்தாளுடன் ஒரு ரூபா முத்திரை ஒன்றும் வைத்து அனுப்ப வேண்டும்.
- சென்ற முறை சிலர் சரியான முறையில் விடைகளை எழுதி அனுப்பியிருந்த போதிலும், அவற்றுடன் ஒரு ரூபா முத்திரையை இணைத்து அனுப்பாத காரணத்தால் அவைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.
- விடைகள் எமக்கு வந்து கிடைக்க வேண்டிய கடைசித் திகதி 12 - 10 - 98. அனுப்ப வேண்டிய முகவரி: பொது அறிவுப் போட்டி - 36, அறிவுக் களஞ்சியம், 226, காங்கேசன்துறைச்சாலை, யாழ்ப்பாணம்.
- முற்றிலும் சரியான விடை எழுதிய ஒருவருக்கு ரூபா 200 பரிசாகக் கிடைக்கும். சரியான விடைகளைப் பலர் அனுப்பியிருந்தால், குலுக்கல் மூலம் நான்கு பெயர்கள் தெரிவு செய்யப்பட்டு நால்வருக்கும் பரிசுத் தொகை சமமாகப் பகிர்ந்து அளிக்கப்படும்.

— ஆசிரியர்

## வெள்ளிக்கிழமையா? — வேண்டாம்!

எங்களுக்கு வெள்ளிக் கிழமை என்றால் புனிதமான நல்ல நாள். ஆனால் மேல் நாட்டவருக்கு வெள்ளிக் கிழமை என்றால் அது வேண்டாத நாள்! வெள்ளிக்கிழமைகளில் அவர்கள் எந்த நல்ல காரியத்தையும் தொடங்க மாட்டார்கள். ஆதாமும் ஏவாளும் தவறு செய்தமைக்காக ஈடன் கார்டனிலிருந்து கடவுளால் விரட்டப்பட்டது ஒரு வெள்ளிக்கிழமை. ஆபேல் என்பவன் தனது சகோதரனைக் கொலை செய்ததும் ஒரு வெள்ளிக்கிழமை பைபிளில் குறிப்பிட்ட ஒரு வெள்ளப் பிரளயம் ஏற்பட்டதும் வெள்ளிக்கிழமை தான். எல்லாவற்றுக்கும் மேலாக ஏசுநாதரைச் சிலுவையில் அறைந்ததும் ஒரு வெள்ளிக் கிழமையில் தான். - இதனால் அவர்கள் எந்த நல்ல காரியத்துக்கும் வெள்ளிக் கிழமையை வேண்டாம் என்கிறார்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவுப் போட்டி 35 - முடிவுகள்

1. இலங்கை, இந்தியா, பாக்கிஸ்தான், பங்களதேஷ், நேபாளம், பூட்டான், மாலைதீவு.

2. அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரான்ஸ், இங்கிலாந்து .

3. ஜனாதிபதி சந்திரிக்கா குமாரணதுங்க.

4. கம்பர் கம்பராமாயணம், வள்ளுவர் - திருக்குறள், இளங்கோ, சிலப்பதிகாரம்.

5. சூரியன் - ஞாயிறு, காரியதரிசி - செயலாளர், ஆஸ்பத்திரி மருத்துவமனை, சந்தோஷம் - மகிழ்ச்சி, சுகம் - நலம்

6. இயக்கர், நாகர்.

7. ஆபிரகாம் இலிங்கன், அமெரிக்க ஜனாதிபதி.

8. பாதுகாப்பற்ற உடலுறவின் மூலம்.

9. 21, 12, 65, 56, 43, 34, 11, ......'11'— ....

10. அமெரிக்கா ஜப்பான் மீது போட்டது.

சரியான விடைகளை ஒரு ரூபா முத்திரையுடன் அனுப்பி வைத்து குலுக்கல் மூலம் பரிசு பெறுவோர்.

1) த. சிவரூபன், 7 /1 முதலாம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

2) ஆ. நியூட்டன், 2, றக்கா வீதி, யாழ்ப்பாணம்.

3) ஆ. பின்ஸ்சன், 52, இராசாவின் தோட்டம் ,யாழ்ப்பாணம்

4) செல்வி வி. டர்மினி, 'றோகினி', மானிப்பாய்.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துக்கள். பரிசுத் தொகையான ரூபா 200 சமமாகப் பகிரப்பட்டு ஆளுக்கு ரூபா 50 வீதம் வழங்கப்படும். பங்கு பற்றிய அனைவருக்கும் நன்றிகள்.

— ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏனாதி நாத நாயனார்

அறுபத்து மூன்று நாயன் மார்களில் ஒருவரான ஏனாதி நாத நாயனார் சோழ நாட்டிலுள்ள 'எயினனூர்' எனும் இடத்தில் பிறந்தவர். சிறந்த சிவனடியாராகிய இவர் சிவனடியார்களையும் மதிப்பவர். அதற்கு அவரது மரணமே சிறந்த எடுத்துக் காட்டு.

ஏனாதி நாத நாயனார் சிறந்த வாளாசிரியர். இவருக்குப் போட்டியாக இருந்த 'அதிசூரன்' என்பவன் இவரிடம் வந்து வாள்சண்டைக்கு அழைத்தான். அதோடு நின்றுவிடாமல் 'வெற்றி பெற்றவரே வாள் ஆசிரியராக இருக்கலாம்' என்றும் கூறினான். இவரும் சம்மதிக்கவே வாட் சண்டை நடந்தது அதிசூரன் அவருடன் எதிர்த்து நிற்கமுடியாமல் தோற்றான். அவன் மனம் சாந்தியடையவில்லை. ஏனாதி நாதரை வஞ்சனையாலாவது கொல்ல வேண்டும் எனத் தீர்மானித்தான். திருநீறு பூசியவர்களை அவர் சிவனடியார் என நினைத்து கொல்ல மாட்டார் என உணர்ந்து திருநீற்றுப் பூச்சுடன் மறு நாளும் போருக்கு அழைத்தான். போர் உச்சத்தை அடையும் வரை தன் திருநீறை மறைத்தபடி போரிட்டான். சரியான சந்தர்ப்பம் வந்ததும் திருநீற்றைக் காட்டினான்.

இதைக் கண்ட ஏனாதி நாத நாயனார் திடுக்குற்றார். தாக்குவதற்கு ஓங்கிய வாளை கீழே இறக்கி 'சிவனடியாரோடு போர் புரியேன்' எனக் கூறி நின்றார். இதைப் பயன்படுத்திய அதிசூரன் சிறிதும் தாமதியாமல் அவரைக் கொன்றான்.

மரணம் உறுதி என நினைத்தும் சிவனடியாரை மதித்த நாயனார் சிவனடியார்களில் மிகச் சிறந்தவராகப் போற்றப்படுகிறார்.

---

## ஆல்ஸ்பைஸ் (Allspice)

இது ஒருவகை வாசனைப்பண்டம். சாதிக்காய், கருவப்பட்டை இலவங்கம் இவை மூன்றின் மணமும் இதில் இருப்பது போல தோன்றும். இது உலர்ந்த கனி போன்றது. மேற்கு இந்தியத் தீவுகளில் வளரும் 'பிமென்டோ' என்னும் மரத்தின் உலர்ந்த கனியே ஆல்ஸ்பைஸ்'

இது மிகவும் வாசனையாக இருப்பதால் இதனை சமையலுக்கும் ஊறுகாய்க்கும் பயன்படுத்துகிறார்கள். ஜமெய்க்கா மிளகு என்றும் அழைக்கப்படும் இதை சமைலுக்கு பாவித்தால் அன்றைய சமையலே கமகமக்கும், அவ்வளவு வாசனை இதற்கு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கு நண்டு

சங்கு நண்டு கடலில் வாழும் ஒரு மென்மையான பிராணி. நத்தை சங்கு, ஊரி முதலியவைகளுக்கு பிறவியிலேயே தடித்த கூடு இருக்கும். ஆனால், இந்தச் சங்கு நண்டுக்கு பிறவியில் அப்படியான கூடு இருப்பதில்லை.

கடலில் இறந்து போன நத்தைகள் சங்குகளின் ஓடுகள் இருக்கும். அந்த ஓடுகளுள் ஒன்றுக்குள் சங்கு நண்டு புகுந்து கொண்டு அதையே தனது வசிப்பிடமாக்கிக் கொள்ளும். தான் போகுமிடமெல்லாம் அந்த ஒட்டுடனேயே செல்லும். இது சற்று வளர்ந்ததும் அந்த ஓடு போதாமலிருக்கும். உடனே அதைக் கழற்றிவிட்டு விட்டு, பெரிய ஓடாகப் பார்த்துப் புகுந்து கொள்ளும்.

சங்கு நண்டுக்கும் இரண்டு முன்னங் கால்களும் பெரியனவாகக் கிடுக்கி போலிருக்கும். இவற்றில் ஒன்று பெரிதாகவும் மற்றது சற்றே சிறியதாகவும் இருக்கும். சங்கு நண்டு தனது உடலை ஓட்டுக்குள் இழுத்து மறைத்துக் கொள்ளும். சமயங்களில் அதன் பெரிய கால்கள் வாய்ப் பகுதியை இறுக்கமாக மூடி மறைத்துக் கொள்ளும்.

சங்கு நண்டின் ஓட்டின் மேற்பகுதியில் வேறு சில ஒட்டுண்ணிப் பிராணிகளும் ஒட்டி வசிப்பதுண்டு. கடற் சாமந்திகள் (Sea Anemones) பெரும்பாலும் சங்கு நண்டின் ஓட்டின் மீது ஒட்டிக் கொண்டு வாழ்கின்றன.

சங்கு நண்டின் ஓட்டை கடல் சாமந்திகள் மூடிக் கொள்வதால் தனது எதிரிகளிடமிருந்து நண்டு தன்னை மறைத்துக் கொள்ளக் கூடியதாயிருக்கிறது. அன்றியும் கடற் சாமந்தியின் உடம்பில் ஒருவித கொட்டணுக்கள் இருப்பதால் வேறு பிராணிகள் அருகில் வரும் போது அவை கொட்டும். அதனால் வேறு பிராணிகள் தூர விலகி விடுகின்றன. சங்கு நண்டுக்கு இது நல்ல பாதுகாப்பு. கடற் சாமந்தி அசைந்து திரிவதில்லை. இரை தேடவும் செல்வதில்லை. சங்குநண்டு உண்ணும் உணவின் சிதறல்களையே இது உண்டு வாழ்கிறது.

வேட்கைக் காலத்தில் ஆண்சங்கு நண்டு. பெண்ணின் உதட்டுப் பகுதியைக் கௌவ்விக் கொண்டு பல நாட்களாக உலாவித்திரியும். இப்படியிருக்கும் போது, பெண் நண்டு தனது உடலின் புறந்தோலை உரித்து விடும். அந்தச் சமயத்தில் ஆண் நண்டு தனது விந்தை பெண் நண்டின் வயிற்றுப் பகுதியில் செலுத்தி விடும். இதனால் பெண் நண்டு கருவுற்று முட்டைகளைப் பொரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிருக்கு ஆபத்தான உணவுப் பழக்கம்

சுமார் பதினைந்து இருபது ஆண்டுகளுக்கு முன்னால் பொப் இசைச் சக்கர வர்த்தியாகவிளங்கிய 'எல்விஸ் பிறிஸ்லி' என்பவரைப் பற்றிப் பலரும் கேள்விப் பட்டிருப் பீர்கள் தமது பொப் இசையினால் உலகம் முழுவதையும் ஒரு கலக்குக் கலக்கியவர் எல்விஸ்.

இந்த எல்விஸ் இளம் வயதில் புகழின் உச்சக் கட்டத்தில் இருக்கும் போதே, தமது 42 ஆவது வயதில் இறந்து போனார்!

என்ன காரணம்?

அவருடைய உணவுப் பழக்கந் தான் காரணம்!

புகழைப் போலவே பணமும் அவரிடம் வந்து குவிந்தது. நாக்குக் கேட்ட விதமெல்லாம் அவர் சாப்பி டுவார் - பெரிய சாப்பாட்டு ராமன்.

காலையிலும் மாலையிலும் அவ ருக்காகமிகப் பெரியஅளவில்'சான்ட் விச்' தயாரிக்கப் படுமாம். ஒவ் வொரு சான்ட் விச்சும் 42,000 கலோரிகள் கொண்டவை. (கிட் டத்தட்ட ஒரு யானைக்குத் தேவை யான கலோரிகள்!)

இவருடைய நாக்குக் கேட்ட உணவின் தாக்கத்தை, உடம்பி னால் தாங்க முடியவில்லை.

நோய் வாய்ப்பட்டு மருத்துவ மனைக்குப் போனார் எல்விஸ். 'இனிமேல் பழச்சாறு மட்டுந்தான் உணவு' என்று மருத்துவர் கண்டிப் பாகச் சொல்லி விட்டார்.

யானைப் பசிக்குச் சோளப் பொரியா? எல்விசினால் பொறுக்க முடியவில்லை. தமக்குப் பெரிய அளவு சான்ட் விச் ஒன்று கொண்டு வந்து தரும்படி நண்பர்களிடம் கெஞ்சினார்.

நண்பர்களும் அவர் ஆசைப் பட்டதைத் திருட்டுத்தனமாகக் கொண்டு வந்து கொடுத்தார்கள்.

பலன்?

அன்றிரவு ஆசையோடு சாப் பிட்டது தான் எல்விசுக்குக் கடைசி சான்ட் விச்! - அடுத்த நாள் காலை யில் அவருடைய இதயம் நின்று விட்டது!

பணமும் வசதியும் இருந்து விரும்புகிற படியெல்லாம் வயிற் றை நிரப்புகிறவர்களுக்கு எல்விசின் வாழ்க்கை ஒரு நல்ல பாடம்!

---

**புதுக் கவிதை**

தனக்காக உயிர்த்தியாகம் செய்த
தீக் குச்சியைப் பார்த்து
அழுகிறது மெழுகுவர்த்தி

— 'மதன்'

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பர உத்தி

பத்திரிகைகள், சஞ்சிகைகளுக்கு அவற்றில் வெளியாகும் விளம்பரங்கள் முதுசெலும்பு போன்றவை. தயாரிப்புச் செலவை விடக் குறைந்த விலைக்கே அவை விற்பனையாகின்றன. இந்த இழப்பை ஈடுசெய்வது விளம்பர வருமானந்தான்.

விளம்பரதாரர்களைக் கவருவதற்குப் பத்திரிகைகளும் தம்மைப் பற்றிப் பெருமையடிப்பதுண்டு.

'இந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு வீட்டிலும் வாசிக்கப்படுவது எங்கள் பத்திரிகையே—'

'அதிக அளவில் விற்பனையாகும் ஒரே பத்திரிகை எங்கள் பத்திரிகைதான்—'

என்றெல்லாம் தம்மைப்பற்றித் தம்பட்டமடிப்பார்கள் பத்திரிகை நடத்துவோர்.

மாக்ட் வெய்ன் என்பவர் இப்படி வெளிப்படையாகத் தம்பட்டமடிக்க வில்லை.

அவர் கையாண்ட வழி வேறு.

பிரபல எழுத்தாளரான அவர், பத்திரிகை ஒன்றின் ஆசிரியராகவும் இருந்தார்.

ஒரு தடவை பெண்மணி ஒருத்தி அவருக்குக் கடிதமொன்றை எழுதியிருந்தார்.

''உங்கள் பத்திரிகையை நான் தவறாது வாசித்து வருகின்றேன். ஆனால் இன்றைய பத்திரிகையுள் சிலந்தி ஒன்றிருப்பதைக் கண்டேன். அதனால், பத்திரிகையை நான் வாசிக்கவில்லை. சிலந்தி இருப்பது அதிர்ஷ்டமானதா துரதிர்ஷ்டமானதா என்பதை அறிய முடியாமற் கவலைப்படுகின்றேன். தயவு செய்து இதைப்பற்றிய உங்கள் முடிவை எழுதுங்கள்.

கடிதத்தைப் பத்திரிகையிலேயே பிரசுரித்துவிட்டு, அதற்குக் கீழே தன் பதிலையும் வெளியிட்டார் மாக்ட் வெய்ன்.

''பத்திரிகைக்குட் சிலந்தி இருப்பது அதிர்ஷ்டமா இல்லையா என்பது எனக்குத் தெரியாது; நான் சோதிட விற்பன்னன் அல்லன்.

''ஆனால் ஒன்றை மட்டும் நிச்சயமாகச் சொல்வேன். யார் யார் எங்கள் பத்திரிகையில் விளம்பரம் செய்திருக்கின்றார்கள் என்பதை அந்தச் சிலந்தி ஆராய்ந்து கொண்டிருக்கின்றது.

''காரணம்''

''எந்தக் கடையின் விளம்பரம் எங்கள் பத்திரிகையில் இடம்பெறவில்லையோ, அந்தக் கடைக்குப் போனால், யாருடைய தொந்தரவும் இன்றி அங்கே கூட்டைக் கட்டிக் கொண்டு நிம்மதியாக இருக்கலாம் என்பதுதான்''

—சரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெய்லி ( Cayley )

1821 ம் ஆண்டு இங்கிலாந்திலுள்ள ரிச் மாண்டு (Richmond) எனும் இடத்தில் ஒரு வணிக குடும்பத்தில் உதித்தது ஒரு முத்து. அவர் தான் கெய்லி. பிற்காலத்தில் கணித அறிஞராக கணிதத் துறையில் ஒரு புதிய சகாப்தத்தையே உருவாக்கியவர் அவர்.

அவரது கணித அறிவிற்கு ஆரம்பத்தில் லண்டன் அரசர் கல்லூரியிலும் பின்னர் கேம்பிரிட்ஜிலுள்ள டிரினிட்டி கல்லூரியிலும் மெருகூட்டப்பட்டது. கல்லூரிகளில் படிக்கும் காலத்திலேயே பலராலும் பாராட்டப்பட்ட கெய்லி, தன் படிப்பைத் தொடர்ந்து சுமார் 14 ஆண்டுகள் வழக்கறிஞராக இருந்தார். ஆனால் அப்பணியைச் செய்து கொண்டே நூற்றுக்கணக்கான கணித ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதினார். பின் 1863 ம்ஆண்டில் இருந்து இறக்கும் வரையில் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் கணிதப் பேராசிரியராகவும் பணியாற்றினார். 1879 ம் ஆண்டு இவர் வெளியிட்ட 'நீள் வளையச் சார் பலன்கள்' (Treatise on Elliptic Functions) என்ற நூல் இவரது கணித அறிவிற்கு ஓர்சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இவர் கணிதத் துறைக்கு ஆற்றிய சேவைகள் குறிப்பிடத்தக்கவை. இவரது ஆராய்ச்சிகள் யாவும் தூய கணிதத்தை (Pure Mathematics) முக்கியமாக எண்களின் பிரிவினையையும் நீள் வளையச்சார் பலன்களையும் சார்ந்தவை. பகு முறை வடிவ கணிதத்திலும் (Analytic geometry) உயர் இயற் கணிதத்திலும் இவரது பங்கு முக்கியமானது. இயற் கணிதத்தின் மாறிலிகள், மாத்ரீக சமன்பாடுகள் இவற்றைப் பற்றிய ஆராய்வுகளையும் இவர் மேற்கொண்டார். இவை தவிர சாரக்கணிதம் (Matrices) இயற் கணிதம் போன்றவை பற்றிய இவரது ஆராய்ச்சிகள் ஒரு புதிய சாகப்தத்தையே உருவாக்கி விட்டன.

பிரிட்டிஷ் கணித அறிஞராகப் போற்றப்படும் இவரது ஆராய்ச்சிகள் இன்று உலகம் முழுவதிலும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. O

---

## அணுக் குண்டு

அமெரிக்கா, யப்பானில் இரண்டு அணுக் குண்டுகளைப் போட்டு ஐம்பது ஆண்டுகள் கழிந்து விட்டன. ஆயினும் அவற்றின் 'சப்தம்' இன்னும் ஓயவில்லை! இந்த அணுக் குண்டுகளினால் இறந்தவர்கள் தொகை இரண்டு லட்சம் பேர்! பாதிக்கப்பட்டவர்கள் இன்னும் அதிகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுபத்து நான்கு கலைகள்

[கலைமகள் 'ஆய கலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர் விக்கும் எம் அம்மை'- அந்த 64 கலைகள் எவை? கீழே பட்டியல் தரப்படுகின்றது. சில கலைகளின் பெயர்கள் வட சொற்களில் உள்ளன. பெயரளவிலாவது அவற்றைத் தெரிவது நல்லது தானே 'சோனா'.

1) அக்கர இலக்கணம்,
2) கணிதம்,
3) வேதம்,
4) இலகிதம்,
5) புராணம்,
6) வியாகரணம்,
7) நீதி சாத்திரம்,
8) சோதிட சாத்திரம்,
9) தருமசாத்திரம்,
10) யோகசாத்திரம்,
11) மந்திரசாத்திரம்,
12) சகுனசாத்திரம்,
13) சிற்பசாத்திரம்,
14) வைத்தியசாத்திரம்,
15) உருவசாத்திரம்,
16) இதிகாசம்,
17) காவியம்,
18) அலங்காரம்,
19) மதுரபாடனம்,
20) நாடகம்,
21) நிருத்தம்,
22) சுத்தபிரமம்
23) வீணை,
24) புல்லாங்குழல் (வேணு),
25) மிருதங்கம்,
26) தாளம்,
27) அத்திர பரீட்சை,
28) கனகபரீட்சை,
29) இரதபரீட்சை
30) கஜபரீட்சை,
31) அசுவபரீட்சை,
32) இரத்தினபரீட்சை,
33) பூப்பரீட்சை,
34) சங்கிராம இலக்கணம்,
35) மல்யுத்தம்,
36) அக்குஷணம்,
37) உச்சாடனம்,
38) வித்துவேஷணம்,
39) மதனசாத்திரம்,
40) மோகனம்,
41) வசீகரணம்,
42) இரசவாதம்,
43) காந்தர்வவாதம்,
44) பைபீலவாதம்,
45) கௌதுக வாதம்,
46) தாதுவாதம்,
47) காருடம்
48) நட்டம்,
49) முட்டி,
50) ஆகாயப்பிரவேசம்,
51) பரகாயப்பிரவேசம்,
52) ஆகாயகமனம்,
53) அதிர்ச்சியம்,
54) இந்திரஜாலம்,
55) மகேந்திரஜாலம்,
56) அக்கினித்தம்பம்,
57) சலத்தம்பம்,
58) வாயுத்தம்பம்,
59) சுக்கிலத்தம்பம்,
60) கன்னத் தம்பம்
61) கட்கத்தம்பம்,
62) அவத்தைப் பிரயோகம்,
63) திட்டித்தம்பம்,
64) வாக்குத்தம்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணுவைத் துளைத்து.......!

நாம் அறிந்துள்ள பொருள்களுள் மிகவுஞ் சிறிய பொருள் — கடுகு. 'கடுகளவு' என்பது ஆகக் குறைந்த அளவைக் குறிக்கின்றது.

கடுகிலும் சிறியது ஒன்றும் இல்லையா?

இருக்கின்றது; 'அணு' என்று அதற்குப் பெயர்.

வெறும் கண்களின் பார்வைக்கு அகப்படாத இந்த அணு, எல்லையற்ற ஆற்றலுடையது எனக் கூறுகின்றார்கள் விஞ்ஞானிகள். அந்த ஆற்றலைப் பயன்படுத்தி மகத்தான ஆக்க வேலைகளையுஞ் செய்யலாம்; பயங்கரமான அழிவுகளையும் உண்டாக்கலாம்.

இந்த அணுவைத் துளைத்து — அதைக் குடைந்தெடுத்து உலகிலுள்ள ஏழு கடல்களின் நீரையும் அதற்குள்ளே நிரப்பி வைக்க முடியுமா?

முடியாது; முடியவே முடியாது. எந்த ஒரு விஞ்ஞானியாலும் எந்தக் காலத்திலும் இதைச் செய்யவே முடியாது.

இப்படிச் செய்ய முடியாத ஒன்றை — இல்லாத ஒன்றை — இருப்பதாகக் காட்டி, அதைத் தமிழ் நூல் ஒன்றிற்கு உவமையாக — இப் பொருள் உவமையாகக் கூறியிருக்கின்றார் தமிழ் மூதாட்டி ஒளவைப் பிராட்டியார்.

அணுவைத் துளைத்தேழ்
கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்

எனத் திருக்குறளின் பெருமையை வியக்கின்றார் அவர். மிகவும் நுண்ணியதான அணுவுக்குள் ஏழு கடல்களும் அடங்கியிருப்பதைப் போன்று வாழ்க்கைக்குத் தேவையான எத்தனையோ உண்மைகளும் உயர்ந்த தத்துவங்களும் குறளடிக்குள் நிரப்பி இருக்கின்றனவாம்.

திருக்குறளைப் படிக்கும்போது ஒளவையாரின் இந்தக் கூற்று மிகைபடக் கூறியதாக — உயர்வு நவிற்சியாக இருப்பதாகப் பலர் கருதலாம்.

★ ★ சிற்பி ★ ★

ஆனால் ஆற அமர இருந்து ஒவ்வொரு குறளடியையும் படித்தால், ஒவ்வொரு சொல்லையும் சிந்தித்தால் —

'இந்த அவசர யுகத்தில் ஒரு தமிழ் நூலை — அதுவும் ஒரு செய்யுள் நூலை ஆழ்ந்து படிப்பதற்கு எங்கே ஐயா நேரம் இருக்கிறது?' என நீங்கள் குறுக்கிடுவது காதில் விழுகின்றது.

நல்ல ஒரு குரு இல்லாமல் — ஒரு வழிகாட்டி இல்லாமல் இவ் விஷயத்தில் ஈடுபட நீங்கள் தயங்குவதும் தெரிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கவலையை விடுங்கள்; நான் இருக்கிறேன்' என்று உங்களுக்குக் கைகொடுக்க வருகின்றார் ஜெயராஜ்!

அகில இலங்கைக் கம்பன் கழக அமைப்பாளர் சம்பவாரிதி இ. ஜெயராஜ் அவர்கள் தான்!

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் சேவையில் ஒவ்வொரு புதன் கிழமை மாலையிலும் கம்பவாரிதி தரும் திருக்குறள் விளக்கத்தைக் கேட்டுப் பாருங்கள்.

அணு ஒன்று துளைக்கப்பட்டு அதற்குள்ளே ஏழு கடல்களும் புகுத்தப்பட்டிருக்கும் அதிசயத்தை உணர்வீர்கள்!

# தூக்கணாங் குருவி

இவ்வகைக் குருவிகளை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அளவிலும் அமைப்பிலும் ஊர்க்குருவியைப் போலவே இருக்கும். இவை அழகழகாக விதம் விதமாக கூடுகளைக் கட்டுவதில் பெயர் பெற்றவை. சாதாரண நார்களையும், பயிர்களின் தண்டுகளையும் (நரம்புகளையும்) வைத்துக்கொண்டு இவை தம் கூடுகளை அமைக்கும் பாணியே தனிதான். இவை அமைக்கும் தொங்கு கூண்டுகள் அழகான கைவண்ணம் தான்!

இவை பெரும்பாலும் நூற்றுக்கணக்கில் கூடியே வாழும். ஒரு வேளை கூட்டுக் குடும்பம் இவற்றிற்குப் பிடிக்குமோ என்னமோ? இவை ஈச்ச மரங்களிலே, இலந்தை மரங்களிலோ கருவேல் மரங்களிலோ நார்களைக் கொண்டு அழகான தொங்கு கூடைகளைக் கட்டி அவற்றில் முட்டைகளை இடும்.

தூக்கணாங் குருவிகள் அறிவானவை. எதைச் சொல்லிக் கொடுத்தாலும் 'கப்' என்று பிடித்துக் கொள்ளும். சிலர் தூக்கணாங் குருவிகளைப் பழக்கி அவற்றுக்குப் பல வித்தைகளைக் கற்றுக் கொடுப்பார்கள். அது மட்டுமல்ல இந்த தூக்கணாங்குருவிகள் சோதிடம் கூறவும் பயன்படுமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கி பிறந்த கதை — சிற்பி

கல்கி – இந்த நூற்றாண்டின் பிரபலமான தமிழ் எழுத்தாளர். தமிழ் கூறும் நல்லுலகில் அவரைத் தெரியாத இலக்கிய இரசிகர்களே இல்லை எனத் துணிந்து கூறலாம். பண்டைத் தமிழ் மன்னர்களின் சாதனைகளையும், தமிழ்ப் பண்பாட்டின் மாண்பினையும் விளக்கும் சுவையான சரித்திர நாவல்களின் முன்னோடி அவர். சிவகாமியின் சபதம், பார்த்திபன் கனவு போன்ற சரித்திர நாவல்களையும், தியாக பூமி அலையோசை போன்ற சமூக நாவல்களையும் பல சிறுகதைகளையும், நகைச்சுவைக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். ''கல்கி'' என்ற வார சஞ்சிகை மூலமும் கலை, இலக்கியத் தொண்டாற்றிய அவரைப் பேராசிரியர் கல்கி எனவும் பலர் கௌரவமாகக் குறிப்பிடுவர்.

அவருடைய இயற்பெயர் ரா. கிருஷ்ணமூர்த்தி. அகஸ்தியர் தமிழ்த் தேனீ, கர்நாடகம், ராத்கி, குகன், தமிழ்மகன், விவசாயி, பெற்றோன் போன்ற புனை பெயர்களில் அவர் எழுதியிருந்தாலும், அனைவர்க்கும் தெரிந்த— அனைவரையும் கவர்ந்த புனைபெயர் ''கல்கி'' தான்.

இந்தப் புனைபெயர் எப்படி உருவானது? இதை ஏன் அவர் சூடிக் கொண்டார்?

''கல்கி''யின் புகழ் வளர வளர இந்தப் புனைபெயரைப் பற்றி அறியும் ஆவலும் வாசகர்களிடம் வளரத் தொடங்கியது. இந்த ஆராய்ச்சியிற் பலர் ஈடுபட்டார்கள்.

''கல்கி'' பிறந்த ஊர் கல்லிடைக் குறிச்சி; தன் சொந்த ஊரின் முதல் இரண்டு எழுத்துக்களான ''கல்லுடன்'' தன் பெயரின் முதல் எழுத்தான ''கி'' யையுஞ் சேர்த்துக் ''கல்கி''யானார் என்பது சில ஆராய்ச்சியாளர்களின் முடிவு! ஆனால் அவருடைய சொந்த ஊர் புத்தமங்கலம் என்றும் கல்லிடைக் குறிச்சி அல்ல என்றும் தெரிந்தவுடன், அந்த ஆராய்ச்சியின் முடிவு வலுவிழந்து விட்டது.

தன் மனைவி ''கல்யாணி'' யின் முதலிரண்டு எழுத்துக்களுடன் தன் முதல் எழுத்தைச் சேர்த்துக் 'கல்கி''யானர் என்பது, அவருடைய மனைவியின் பெயர் ருக்மணி என்று தெரிந்தவுடன் அடிபட்டுப் போய் விட்டது.

உலகிலே தர்மங் குன்றி, அதர்மம் மேலோங்கும் போது அதர்மத்தை அழிக்கவும், தர்மத்தைக் காக்கவும் யுகந்தோறும் தான் அவதரிப்பதாகக் கீதையிலே கண்ணன் சொன்னான் அல்லவா? இதுவரை ஒன்பது அவதாரங்கள் எடுத்து விட்டான். இனி எடுக்கவிருக்கும் பத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாவது அவதாரம் கல்கி அவதாரம். தன் எழுத்தினால், சமுதாயச் சீர் கேடுகளையும், அக்கிரமங்களையும், அநியாயங்களையும் சாட விரும்பிய படியால் ''கல்கி'' என்ற அவதாரப் பெயரை இவர் சூடினார் எனச் சிலர் விளக்கம் கொடுத்தார்கள்.

காரணம் இதுவல்ல எனக் கூறிய ''கல்கி'' தன் புனைபெயரின் கதையைத் தானே ஒரு தடவை விளக்கினார்.

இவர் முதன் முதலில் எழுத்தாளராகப் பணி புரிந்த இடம் 'நவசக்தி'' பத்திரிகை அலுவலகம். ''நவசக்தி''யின் ஆசிரியராக இருந்தவர் திரு வி.க.என்ற கல்யாண சுந்தர முதலியார். இவரைத் தன் எழுத்துலக வழிகாட்டியாகவும் குருநாதராகவும் மதித்தவர் கல்கி. குருபக்தி காரணமாகவும், தன் நன்றியையும், மதிப்பையும் வெளிப் படுத்துவதற்காகவும் தன் குரு நாதரின் முதல் இரண்டு எழுத்துக்களுடன் தன்னுடைய ஓர் எழுத்தையுஞ் சேர்த்துத் தன்னைக் 'கல்கி' யாக்கிக் கொண்டார் ரா.கிருஷ்ணமூர்த்தி!

## பிரதமர் சேர்ச்சிலின் பதிலடி

பிரபல ஆங்கில நாடகாசிரியரான ஜோர்ஜ் பேணாட்ஷோ, கிண்டல் நகைச்சுவை கலந்து எழுதுவதில் வல்லவர் பெரிய. மனிதர்களையும் மட்டந்தட்டத் தயங்காத அவர்' சில சமயம், தானே வாங்கிக் கட்டிக் கொள்வதுமுண்டு.

அவருடைய நாடகங்கள் நாட்கணக்காக நடைபெறுவது வழக்கம். ஒரு சமயம் அவருடைய புதிய நாடக மொன்று முதன் முதலாக மேடையேற விருந்தது. தன்னுடைய அந்த நாடகத்தைப் பிரதமர் வின்ஸ்ரன் சேர்ச்சில் வந்து பார்வையிட வேண்டும் என விரும்பினார் ஷோ.

'என்னுடைய நாடகத்திற்குரிய இரண்டு நுழைவுச் சீட்டுக்களை அனுப்புகின்றேன். ஒன்று உங்களுக்கு, மற்றையது உங்களுடைய நண்பருக்கு — அப்படி யாராவது உங்களுக்கு இருந்தால் !' என எழுதி அனுப்பினார் அவர்.

பிரதமர் சேர்ச்சில் உடனேயே பதில் எழுதினார்:- 'உங்கள் அழைப்புக்கு நன்றி. முதலாவது காட்சிக்கு வர முடியாதுள்ளது. இரண்டாவது காட்சிக்கு வருவேன் — அப்படி ஒரு காட்சி நடக்குமென்றால்..!'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்வரலாறு தந்த தமிழ்ப்பா வாணன்!

''சிலப்பதிகார ஆசிரியரான இளங்கோவடிகள், தம்முடைய தமையனான சேரன் செங்குட்டுவன் அரசுக்கு உரியவனாகான் எனவும் தாமே அரசர் ஆவார் எனவும் அரசவையிலே நிமித்திகன் கூறியதைப் பொய்ப்பிக்க அரச போகங்களைத் துறந்து துறவியானார்'' என்ற செய்தி கற்பனை அல்ல; உண்மை வரலாறு. சிலப்பதிகாரத்தின் இறுதிக் காதையிலே அவர் இதனைத் தேவந்திகை தமக்கு உரைத்ததாகப் பாடியுள்ளார். அப்பாடலடிகள் பின்வருவன:

[செங்குட்டுவனும் மன்னரும் பத்தினித் தெய்வத்தை (கண்ணகியை) வணங்கி வரம்பெற்றுப் போயினர். பின்பு ஒரு நாள்...]

யானும் சென்றேன் என்னெதிர் எழுந்து
தேவந் திகைமேல் திகழ்ந்து தோன்றி
வஞ்சி மூதூர் மணிமண் டபத்திடை
நுந்தை தாளிணை இருந்தோய் நின்னை
அரைசுவீற்றிருக்கும் திருப்பொறி உண்டென்று
உரை செய் தவன்மேல் உருத்து நோக்கி
கொங்கு அவிழ் நறுந்தார்க் கொடித்தேர்த் தானைச்

செங்குட் டுவன் தன் செல்லல் நீங்கப்
பகல்செல் வாயிற் படியோர் தம்முன்
அகலிடப் பாரம் அகல நீக்கிச்
சிந்தை செல்லாச் சேணெடுந் தூரத்து
அந்தமில் இன்பத்து அரசாள் வேந்தென்று
என் திறம் உரைத்த இமையோர் இளங்கொடி.

(சிலப்பதிகாரம்- வரம் பெறுகாதை. 171-183)

நானும் பத்தினி கோட்டத்துக்குப் போயினேன். அங்குப் பத்தினி தெய்வமாகிய கண்ணகி, கோயிற் பூசாரிணியிலே தன்னை ஆவாகித்து

''சேரர் தலை நகரமான வஞ்சி மூதூரிலே நீ மணிமண்டபத்தில் உன் தந்தையின் (சேரலாதனின்) இருபாதங்களின் அடியில் அமர்ந்திருந்தாய். அவ்வேளையில் உனக்கே அரசாளும் நல்வினை உண்டென்று நிமித்திகன் உரைத்தான். அவனை நீ கோபத்தோடு நோக்கினாய். தேன் அவிழ்கின்ற, மணம் பொருந்திய மாலை அணிந்தவனும், கொடி அமைந்த தேர்ப்படையுடையவனுமான (உன் அண்ணன்) செங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குட்டுவனின் கவலை நீங்கும் வண்ணம், சிந்தனை செல்லாத நெடுந் தொலைவில் உள்ளதும், முடிவில்லாத இன்பம் அளிப்பதுமான துற வுலக அரசனாயினாய்'' என்று தேவர்களின் இளங் கொடி போன்ற வளான கண்ணகி, தெய்வமுற்றுரைக்கும் (தேவந்திகை மூலம்) என் றுறத்தினை (வரலாற்றினை) உரைக்க....''

''...... .. இவ்வரலாறு பத்தினிக் கடவுள் தேவந்திமேல் தோன்றித் தம்மை நோக்கி உரைத்ததாக அடிகள் தாமே வரந் தருகாதையில் அருளிச் செய்தமையால்......''

இவ்வுண்மை டாக்டர் சுப. மாணிக்கத்தின், சிந்தனைக்களங்கள், என்ற நூலில் சிலப்பதிகாரத் திறன்' என்ற கட்டுரையிலும் எடுத்துக் காட்டப் பட்டுள்ளது.

---

## சுதந்திரம் வேண்டாம்!

அத்திலாந்திக் சமுத்திரத்தில் சிறு சிறு தீவுகளைக் கொண்ட நாடு பெர்மூடா. முந்நூறு ஆண்டுகளுக்கு மேலாக அது பிரிட்ட னின் அடிமை நாடாக இருக்கிறது. பிரிட்டன் தனது பிடியிலிருந்த நாடுகளுக்கெல்லாம் சுதந்திரம் கொடுத்து வந்த போது, இந்த பெர்மூடா நாட்டுக்கும் சுதந்திரம் வழங்க முன் வந்தார்கள், அதற் காக அங்கே ஒரு தேர்தல் நடந்தது. 75 வீதமான மக்கள் 'சுதந்திரம் வேண்டாம். பிரிட்டிஷ் ஆட்சியிலேயே இருக்க விரும்புகிறோம்' என்று வாக்களித் தார்களாம்! (சுதந்திரம் பெற்ற நாடுகள் படும் பாட்டைக் கண்டு பயந்து விட்டார்கள் போலும்)

---

## திருவேகம்பம்

'திருவேகம்பம்' என்பது காஞ்சியிலுள்ள ஒரு சைவத் திருத் தலம். 'திருவேகாம்பரம்' என்பதே சரியான பெயர். காலப்போக் கில் இது திருவேகம்பம் எனத் திரிந்து விட்டது.

திரு+ ஏக+ ஆம்பரம். ஏகம்— ஒன்று, ஆம்பரம்— மாமரம். இத் தலத்தில் ஒற்றை மாமரத்தின் கீழ் சிவபிரான் இருப்பதால் இந்தப் பெயர் வந்தது.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெச்சத்தகுந்த
அச்சு வேலைகள்

O குறைந்த செலவு
O கூடிய கவனிப்புடன்

ஆனந்தா
அச்சகம்
யாழ்ப்பாணம்

தொ. பே. 2820

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும், யாழ் நகரில் —

# ஆர். ஜி. ஸ்ரோர்ஸ்

# R. G. STORES

56 A, மணிக்கூட்டு வீதி,

யாழ்ப்பாணம்.

* அழகு சாதனப் பொருட்கள்
* பாடசாலை உபகரணங்கள்
* ஃபிலிம் றோல் முதலிய

போட்டோ கலைஞர்களுக்குத்

தேவையான பொருட்கள்

**தரமானவை! நியாயமான விலை!**

கிளை;

இல. 54, றக்கா வீதி, யாழ்ப்பாணம்.



அறிவுக் களஞ்சியம் - 36. யாழ்ப்பாணம், 226, காங்கேசன் துறைச்சாலை ஆனந்தா [illegible] அச்சகத்தில் அச்சிட்டு வெளியிட்டவர் [illegible]

செப்டம்பர் ' 98



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org